வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 06.02.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 37 பக்கங்கள் : 12

# இந்திய வெளியுறவு அமைச்சரை நேற்று சந்தித்தார் அநுரகுமார!

## ஜே.வி.பியுடன் உறவை உறுதிப்படுத்தும் டில்லி

புதுடில்லி, பெப்ரவரி 06

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க நேற்று புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.**

**மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான குழு 5 நாள் பயணமாக இந்தியா சென்றுள்ளது.**



இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் இந்தக் குழு நேற்று டில்லி சென்றுள்ளது. இந்த பயணத்தில் அநுரகுமார திஸநாயக்கவுடன், கலாநிதி நிஹால் அபேசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தேசிய செயற்குழு உறுப்பினர் பேராசிரியர் அனில் ஜயந்த ஆகியோர் இணைந்துள்ளனர்.

அநுரகுமார திஸநாயக்க மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு குறித்து தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கையின் நம்பகமான நண்பராகவும் நம்பகமான பங்காளியாகவும் இந்தியா செயற்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அண்மைய நாட்டுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கையை தொடர்ந்தும் கடைப் பிடிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இரு தரப்பு உறவுகள் மற்றும் அதன் ஆழமான பரஸ்பர நன்மைகள் குறித்தும் இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள்

11

## இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரை சந்தித்தார் அநுர

புதுடில்லி, பெப். 06

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்குமார் டோவலை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது பிராந்திய பாதுகாப்பு, இந்தியா - இலங்கையுடன் தொடர்புபட்ட இரு தரப்பு விவகாரங்கள் குறித்து பேச்சுகள் நடந்தன.

ஜே. வி. பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்தும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டார். (அ)

## சாந்தனை அழைத்துவர ஜனாதிபதி இணக்கம்!

கொழும்பு, பெப். 06

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுதலையானவர்களுள் ஒருவரான சாந்தனை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் வெளியிட்டுள்ளார்.

அதற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்வதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சாந்தனை இலங்கைக்கு அழைத்து வரும் தேவையை

11

## "கெஹலிய படுகொலையாளி"

கொழும்பு, பெப். 06

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் இம்யுனோகுளோபுலின் மோசடி ஒரு படுகொலை நடவடிக்கை என பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள தரம் குறைந்த இம்யுனோகுளோபுலினை இறக்குமதி செய்தார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் மோசடியில் ஈடுபட்டுள்ளார் படுகொலையில் ஈடுபட்டுள்ளார் எனகருதவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்

11

## தொடர் காய்ச்சல் பெண் உயிரிழப்பு

முல்லைத்தீவு, பெப். 06

தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெண்ணொருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

முல்லைத்தீவு - முள்ளியவளையை சேர்ந்த அன்ரன் அனிஸ்ரலஸ் (வயது 53) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த 29ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டதை

11

## இலஞ்சம், ஊழலுக்காக கைதானவர்களில் பெரும்பான்மையினர் பொலிஸ் அதிகாரிகள்

கொழும்பு, பெப். 06

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கடந்த வருடம் இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 3,431 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலஞ்சம் மற்றும் ஊழல் முறைப்பாடுகளுக்காக கைது செய்யப்பட்டவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் பொலிஸ் அதிகாரிகள் என்றும் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 2,789 முறைப்பாடுகள் விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## மக்களுக்கான சேவையை உரியமுறையில் நிறைவேற்றுவதே அரச அலுவலரின் கடமை

### வடக்கு ஆளுநர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், பெப். 06

மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், மக்களுக்காகவே சேவையாற்ற கடமைப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பான மீளாய்வு கூட்டம், கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்தவின் பங்கேற்புடன், யாழ் மத்திய கல்லூரியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.



வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், மத்திய அமைச்சின்

11

## பொருட்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, பெப். 06

ஆறு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அதிகபட்ச மொத்த மற்றும் சில்லறை விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக, நேற்று திங்கட்கிழமை நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது .

இதன்படி, செத்தல் மிளகாய், வெள்ளை சீனி, இறக்குமதி

11

## வட்டு. பொலிஸாரிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்!

### யாழ். பல்கலைக்கழக மாணவன் மனித உரிமை குழுவில் தஞ்சம்

யாழ்ப்பாணம், பெப். 06

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கடுமையான தாக்குதலுக்குள்ளானதாக தெரிவித்து பல்கலைக்கழக மாணவன் ஒருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில், தனது உயிரை காப்பாற்றுமாறு தஞ்சம் அடைந்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்றதாக பாதிக்கப்பட்டவரால் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் வட்டுக்கோட்டை கோட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த கருணாகரன் நிதர்ஷன் எனும் 27 வயதான இளைஞனே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடளித்துள்ளார்.

போக்குவரத்து விதிமீறல் குற்றச்சாட்டில் சிவில் உடையணிந்த பொலிஸார் வீதியில் வைத்து

11

# இப்படியும் நடக்கிறது

முகநூலில் படித்தது என்ற குறிப்புடன் நண்பர் ஒருவர் அனுப்பி வைத்த கதை ஒன்றை இங்கே முழுமையாகத் தரவேண்டும்போல இருந்தது. அதனை அப்படியே தருகின்றேன். அந்தக் கதையில் கூறப்படும் விடயம் உண்மையானதுதானா என்பதெல்லாம் அவசியமில்லை என்று பட்டது. ஆனால், அதில் சொல்லப்படுகின்ற விடயம் கவனத்திற்குரியதாக இருந்தது.

முன்னொரு காலத்தில் ஜப்பான் நாட்டில் சட்டம் ஒன்று நடைமுறையில் இருந்தது.

அதாவது வேலை செய்ய முடியாத முதுமைப் பருவத்தை அடையும் வயதானவர்களை தூக்கிச் சென்று மலைப் பகுதியில் விட்டு விட வேண்டும்.

இதனால் வயதானவர்களைப் பராமரிக்க வேண்டிய சுமை நாட்டு மக்களுக்கு இல்லை என்பது அரசனின் எண்ணம்.

அந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது ஒரு தந்தையும் மகனும் ஒருவரிடம் ஒருவர் மிகுந்த அன்பு கொண்டவர்களாக விளங்கினர்.

நாளடைவில் அந்தத் தந்தை வேலை செய்ய இயலாத முதுமைப் பருவத்தை அடைந்தார். தந்தையைப் பிரிய அவனுக்கு மனமே வரவில்லை.

வீட்டின் பின்பகுதியில் தந்தையை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்தான். மிகவும் இரகசியமாக அவருக்கு உணவளித்து வந்தான்.

ஒருநாள் அரசன், தன் மக்களின் அறிவுத் திறனை சோதிக்க எண்ணிப் போட்டி ஒன்றை அறிவித்தான்.

சாம்பலால் திரிக்கப்பட்ட கயிற்றைக் கொண்டு வர வேண்டும் என்பதே அந்தப் போட்டியாகும். போட்டியைக் கேட்டதும் எல்லோரும் சாம்பலால் எவ்வாறு கயிறு திரிக்க இயலும் என்று எண்ணினர். யாராலும் சாம்பல் கயிறு உருவாக்க முடியவில்லை. அரசனின் போட்டி பற்றி அந்த மகன் தன் தந்தையிடம் தெரிவித்தான்.

போட்டியைக் கேட்ட தந்தை, மகனிடம் பெரிய தாம்பாளத்தில் கயிற்றை முறுக்கி வைத்து, அதனை எரியச் செய்தால் சாம்பலால் திரித்த கயிறு கிடைக்கும் என்றார்.

மகனும் தந்தை கூறியபடி தாம்பாளத்தில் கயிற்றை வைத்து எரித்தான். கயிறு எரிந்து சாம்பலான பின்பும் அதே கயிறு வடிவில் இருந்தது. இதனை அரசனிடம் காண்பித்து பரிசைப் பெற்றான்.

ஒரு மாதம் கழித்து அரசன் இரண்டாவது போட்டியை அறிவித்தான்.

அரசன் ஒரு மரக்கொம்பைக் கொடுத்து இதனுடைய அடிப்பாகம் மற்றும் நுனிப் பாகத்தைக் கண்டுபிடிக்குமாறு மக்களுக்கு ஆணையிட்டான்.

கிட்டத்தட்ட இரு பகுதியும் ஒன்றாகத் தெரிந்ததால் யாராலும் அடி எது? நுனி எது? என்று சொல்ல முடியவில்லை.

மகன் தந்தையிடம் அரசனின் கேள்வியைக் கேட்டான்.

தந்தை மரக்கொம்பை தண்ணீரில் போட்டால், அது லேசாக சாய்வாக மூழ்கும் அப்போது கீழ் நோக்கி இருக்கும் பகுதி அடி, மேல் நோக்கி இருக்கும் பகுதி நுனி என்றார்.

மகனும் தந்தை கூறியவாறே அரசனுக்குச் செய்து காண்பித்து இம்முறையும் பரிசைப் பெற்றான்.

இதனைக் கண்டு ஆச்சரியமடைந்த அரசன் 'உன்னால் எப்படி இரண்டு கேள்விகளுக்கும் சரியான விடைகளைக் கண்டுபிடிக்க முடிந்தது?' என்று கேட்டான்.

'அரசே உங்களுடைய கேள்விகளுக்கு விடை காணும் அளவுக்கு எனக்கு அனுபவம் கிடையாது. என்னுடைய வயதான தந்தை என்னுடன் இருக்கிறார். அவர் மூலமே எனக்குத் தங்களின் கேள்விக்கான பதில் கிடைத்தது.' என்று கூறினான்.

இளைஞனின் பதில் அரசனை நெகிழச் செய்தது.

சிக்கலான பிரச்னைகளுக்கு தீர்வு காண வயதானவர்களின் அனுபவம் உதவியாக இருக்கும் என்பதை அரசன் உணர்ந்து கொண்டான்.

உடனே அவன் 'இனி வேலை செய்ய இயலாத வயதானவர்களை, மலைப் பகுதிக்கு கொண்டு போய் விடத் தேவையில்லை' என்று உத்தரவு போட்டான்.

அதுமுதல் வயதானவர்கள் தங்கள் கடைசிக் காலத்தை பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாகக் கழித்தனர்.

அண்மைக்காலமாக தமிழ் அரசின் பெருந்தலைவர் சம்பந்தன் குறித்தும் மூத்த தலைவர் மாவை குறித்தும் சமூகவலைத்தளங்களில் பலரும் எழுதிவருவதை காணமுடிந்தது. இவற்றைப் படிக்கின்றபோது இந்தக் கதை ஞாபகத்துக்கு வருவதையும் தவிர்க்க முடியவில்லை.!

- ஊர்க்குருவி.

## நவரத்தினசிங்கம் நூற்றாண்டு விழாவும் கல்வி வளாகம் அங்குரார்ப்பணமும்

யாழ்ப்பாணம், பெப். 06

அமரர் எட்வேட் நவரத்தினசிங்கம் நூற்றாண்டு விழாவும் சீ. வீ. ஈ. நவரத்தினசிங்கம் கல்வி வளாகம் - அறக்கட்டளையின் அங்குரார்ப்பண நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு மகா வித்தியாலய முன்றலில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் தி. யோண் குயின்ரைன்ஸ், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு பிரதேச செயலர் எவ். சி. சத்தியசோதி, வட மாகாண உதவி கல்வி பணிப்பாளர் தில்லைநாதன் தர்மலிதுர்கம், நெடுந்தீவு உதவி பிரதேச செயலாளர் நிவேதிகா கேதீசன், முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேல் ஆனந்தன் ஆகியோர் பங்கேற்பர்.

இந்நிகழ்வில் மலர் வெளியீடும் நடைபெறவுள்ளது.

## நாளை பாராளுமன்றம் கூடும்

கொழும்பு, பெப். 06

இடைநிறுத்தப்பட்டுள்ள பாராளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர் நாளை மீண்டும் ஆரம்பமாக உள்ளது.

இதன்போது, அரசியல் கட்சித் தாவல்கள் நடைபெறலாம் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்றைய தினம் ஜனாதிபதி சம்பிரதாயபூர்வமான தனது கொள்கை விளக்க உரையை நிகழ்த்திய பின்னர், அதனை ஆதரிப்பதாக கூறி இந்த கட்சித் தாவல்கள் இடம்பெற வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

கட்சித் தாவல் தொடர்பாக எதிர்க்கட்சியில் இருக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இரகசியமான பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

எனினும் எதிர்க்கட்சியில் இருந்து எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணையவுள்ளனர், அவர்கள் எந்த கட்சியின் உறுப்பினர்கள் என்ற விவரங்கள் தெரியவரவில்லை. (அ)

## ஆலய கஞ்சிக் கிடாரத்துக்குள் விழுந்து சிறுவன் படுகாயம்!

யாழ்ப்பாணம், பெப். 06

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் தேவாலயமொன்றில் கஞ்சிக் கிடாரத்தில் விழுந்து சிறுவன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இந்த சம்பவம் நடந்தது.

தேவாலயத்தில் விசேட நிகழ்வொன்றுக்காக கஞ்சி தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்போது, மூன்றரை வயது சிறுவன் ஒருவர் தவறுதலாக கஞ்சி கிடாரத்துக்குள் தவறி விழுந்துள்ளார்.

அவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மாற்றப்பட்டுள்ளார். (அ)

## வர்த்தகர் ஒருவருக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, பெப். 06

நவகமுவ பிரதேசத்தில் உள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவருக்கு பாதாள உலகக் கும்பல் அச்சுறுத்தல் விடுத்துள்ளதையடுத்து அவரின் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

குறித்த வர்த்தகரின் வீட்டுக்கு முன்னால் பாதாள உலகக் கும்பல் குற்றவாளி ஒருவர் தொலைபேசி இலக்கத்துடன் மலர் வளையம் வைத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

வர்த்தகரின் வீட்டுக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இருவரும் அப்பகுதியை விட்டு தப்பி சென்றனரென வும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். அத்துடன், வர்த்தகரின் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ)

## வாக்குவாதம் கொலையில் முடிந்தது!

கொழும்பு, பெப். 06

மத்துகம பகுதியில் வீடொன்றில் இடம்பெற்ற விருந்து நிகழ்வில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது கூரிய ஆயுதத்தால் தாக்கி நபர் ஒருவர் கொல்லப்பட்டார் என்று மத்துகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மத்துகம ஓவிட்டிகல கொரட்டில்லாவ பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய டொன் கலன மதுஷன் என்பவரே இவ்வாறு கொலையானார்.

இந்த விருந்தில் கலந்து கொண்ட மத்துகம வெலிகட்டிய சண்டசிரிகம பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரே கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலைக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் மத்துகம தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விபத்தில் தாய் மரணம் மகள் படுகாயம்

கொழும்பு, பெப். 06

ஹொரணை - பாணந்துறை வீதியின் குல்பான பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை மற்றும் மூன்று வயது மகள் ஆகியோர் பயணித்த ஒட்டோ இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸில் மோதி விபத்துக்குள்ளானதாக ஹொரண தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம, ரைகம கொஸ்வத்தபர பகுதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான ஆர். ஏ. தனுஜா பிரியதர்ஷனி என்ற 40 வயதுடைய பெண்ணே விபத்தில் உயிரிழந்தார்.

பெற்றோர்கள் இருவரும் தமது மகளின் தேவைக்காக ஹொரண நகருக்கு வந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசிகள் தாய், தந்தை மற்றும் சிறுமியை ஹொரண ஆதார வைத்திய சாலையில் சேர்த்தபோது தாய் உயிரிழந்தாரென வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

காயமடைந்த சிறுமியின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், அவருக்கு அடிப்படைச் சிகிச்சை அளிக்கப்பட்டு, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டாரெனவும் மருத்துவ மனை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## சுதந்திர தினத்துக்கு தெற்கிலும் எதிர்ப்பு

கொழும்பு, பெப். 06

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாத்தறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று முன் தினம் வடக்கு மற்றும் கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் கரிநாள் அனுஷ்டிக்கப்பட்டு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் தெற்கிலும் மாத்தறையில் பெண்கள் குழுவொன்று சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

அரசாங்கத்தின் அடக்குமுறைகள், பொதுமக்கள் மீதான வரிச்சுமை மற்றும் பொருட்களின் விலையேற்றம் என்பவற்றிற்கு எதிராக இவர்கள் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டதாக தெரியவந்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
06.02.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், தை 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அநுரகுமாரவின் இந்திய விஜயம்

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவின் இந்திய விஜயம் அதிக கவனிப்பைப் பெற்றிருக்கின்றது. ஜே. வி. பி. அடிப் படையில் இந்திய எதிர்ப்பு கட்சியாக அடையாளம் காணப்பட்ட கட்சி. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்த கட்சி எனினும், அண்மைக்காலமாக தங்களின் அணுகுமுறை களில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதான ஒரு தோற்றத்தை அந்தக் கட்சி காண்பித்து வருகின்றது.

அதிகாரத்திற்கு வர வேண்டுமென்றால் மாற்றங்கள் தவிர்க்க முடியாதது - என்பதை அவர்கள் உணர்ந்தும் இருக்காலம், எனினும், ஜே. வி. பியின் இந்திய விஜயம் ஒரு செய்தியை உறுதிப்படுத்துகின்றது. அதாவது, இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் அதிக முக்கியத்துவத்தை பெற்றிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில்தான், ஜே. வி. பியின் தலைவரது இந்திய விஜயம் இடம்பெற்றிருக்கின்றது.

பெரும் பொருளாதார நெருக்கடி, அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சி ஆகியவற்றால் இலங்கைத் தீவின் அரசியல் ஒழுங்குநிலை, பெருமளவில் குழம்பியிருக்கின்றது. பாரம்பரிய கட்சிகளின் செல்வாக்கு ஒப்பீட்டு அடிப்படையில் வீழ்சியுற்றிருக்கின்றது. சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் புதியவர்களை தேடும் போக்கு அதிகரித் திருக்கின்றது. அண்மைக்கால கருத்துக் கணிப்புகளும் அவ்வா றான தகவலையே வெளிப்படுத்துகின்றது. எந்தவொரு கட்சியும் ஐம்பது விகித ஆதரவைப் பெற முடியாத நிலையிருப்பதாகக் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. இந்தப் பின்புலத்தில்தான் அதிகாரத்தில் ஒருபோதுமே இருந்திராத, ஜே.வி.பியின் ஆதரவானது, குறிப்பிடத் தக்களவில் அதிகரித்திருக்கின்றது. அவ்வாறு அதிகரிப்பதில் ஆச்சரியப்படவும் ஒன்றுமில்லை.

இது ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்றது அதாவது, ரணில் விக்கிரமசிங்கவால் தனித்து வெற்றிபெறமுடியாது. அதேபோன்று சஜித் பிரேமதாஸவாலும் தனித்து வெற்றிபெற முடியாது. இந்த நிலை யில்தான் ஜே. வி. பி. ஒரு தீர்மானகரமான அரசியல் சக்தியென்னும் கவனிப்பைப் பெற்றிருக்கின்றது. இல்லாவிட்டால் புதுடில்லி அநுரகு மாரவை அழைத்திருக்காது. புதுடில்லியின் அழைப்பு, ஜே. வி. பியின் செல்வாக்கிற்கான ஓர் அங்கீகாரமாகும்.

இந்த இடத்தில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? வழமைபோல், ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு பின்னால் சென்று அவர்களின் வாக்குறுதிகளில் திருப்திகொள்ளப் போகின்றனவா - அல்லது ஜனாதிபதி தேர்தலை ஒரு துருப்புச்சீட்டாக பயன்படுத்தி இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களும் நிராகரிக்கவே முடியாத ஒரு தரப்பு என்பதை நிரூபிக்கப்போகின்றனவா? என்ன செய்யப்போகின்றன? தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக தீர்க்கமானதொரு முடிவை எடுத்தால் மட்டுமே தமிழ் மக்களை நோக்கி, இராஜ தந்திர தரப்புகள் திரும்பும். இல்லாவிட்டால், இந்த சந்தர்ப்பமும் கை நழுவும். 2009இற்கு பின்னரான மூன்று தேர்தல்களிலும் தென் னிலங்கையின் வாக்காளர்கள் அதிசயங்களை நிகழ்த்துவார்கள் என்னும் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் வாக்குகள் அவர் களை நோக்கித் திருப்பப்பட்டது ஆனால் தமிழ் மக்களுக்கு சாதகமாக எதுவுமே நடைபெறவில்லை ஆகக் குறைந்தது. 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட அமுல்படுத்த முடியவில்லை. மாகாண சபை தேர்த லைக்கூட அரசாங்கம் நடத்தவில்லை. இவற்றை கருத்தில் கொண்டு, தமிழ் மக்களை திரும்பிப் பார்க்கும் வகையில், ஜனாதிபதி தேர்தலை எவ்வாறு கையாளுவதென்று, தமிழ் கட்சிகள் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

## பாடசாலையில் மரம் சரிந்து வீழ்ந்து 5 வயது மாணவர் பலி

*கொழும்பு, பெப். 06*

*கம்பளையில் உள்ள பாடசாலை ஒன்றில் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் 5 வயது மாணவர் ஒருவர் உயிரிழந்தார்.*

*அத்துடன் 02 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.*

*சம்பவத்தில் காயம டைந்த 2 மாணவர்களும் சிகிச்சைக்காக கம்பளை போதனா வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.*

*(அ)*

## மரக்கிளை முறிந்து விழுந்து 14 வயது மாணவன் மரணம்

### நோர்வூட் பகுதியில் சோகம்

*கொழும்பு, பெப். 06*

*மரக்கிளை முறிந்து, விழுந்ததில் 14 வயது மாண வர் ஒருவர் பலியான பரிதா பகரமான சம்பவமொன்று நோர்வூட் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நியூட்டன் தோட்டத்தில் இடம்பெற் றுள்ளது.*

*நோர்வூட் தமிழ் வித்தியாலயத்தில் தரம் தரம் 9 இல் கல்வி பயிலும் முருகன் அஷால் (வயது-14) என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்தார்.*

*சிகையலங்கார நிலை யத்துக்கு சென்று கொண் டிருக்கையிலேயே மரக் கிளை முறிந்து விழுந்து ள்ளது. இதனையடுத்து அவர், டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள் ளார்.*

*இவ்வாறு கொண்டு செல்லப்படும் வழியிலேயே அவர் உயிரிழந்துவிட்டார். இதனையடுத்து மாணவ னின் சடலம் நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.*

*(அ)*

## 'யுக்திய' நடவடிக்கை மேலும் 667 கைது!



*கொழும்பு, பெப். 06*

*நாடு முழுவதும் முன் னெடுக் கப்படும் 'யுக்திய' நடவடிக்கை யின்போது நேற்று திங்கட்கி ழமை அதிகாலை 12.30 மணியு டன் நிறைவடைந்த 24 மணித்தி யாலங்களில் 667 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர் புடைய 559 சந்தேக நபர்களும், பொலிஸா ரினால் தேடப்பட்டு வரும் பட் டியலில் இருந்த 107 சந்தேக நபர்களும் இதன் போது கைதா னதாக பொலிஸார் தெரிவித்த னர்.*

*கைதான 559 சந்தேக நபர்களில் போதைப்பொரு ளுக்கு அடி மையான 3 சந்தேக நபர்கள் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள னர்.*

*இந்த நடவடிக்ககையின் போது 191 கிராம் ஹெரோ யின், 103 கிராம் ஐஸ் போதைப் பொருள் , 02 கிலோ 300 கிராம் கஞ்சா என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.*

## பௌசி மீது விசாரணை

*கொழும்பு, பெப். 06*

*பாராளுமன்ற உறுப் பினர் ஏ. எச். எம். பௌ ஸிக்கு எதிரான வழக்கு விசாரணை எதிர்வரும் 29 ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.*

*பாராளுமன்ற உறுப் பினர் ஏ. எச். எம். பௌஸி அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக கடமையாற் றிய காலத்தில் நெதர் லாந்து அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாகனம் ஒன்றைத் தனது தனிப்பட்ட பாவனைக்கு பயன்படுத்தி அரசாங்கத்துக்கு 10 இலட்சம் ரூபாய் இழப்பை ஏற்படுத்தியமை தொடர் பிலேயே அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.*

*மேல் நீதிமன்ற நீதிபதி சவேந்திர பெர்னாண்டோ முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டது.*

*(அ)*

## கழிவறை குழியில் விழுந்து பெண் பலி

*கொழும்பு, பெப். 06*

*ஹோமாகம பகுதியில் பாதுகாப்பற்ற கழிவறை குழியில் விழுந்து பெண் ஒருவர் உயிரிழந்தார்.*

*தனது மகளின் இல் லத்தில் வசித்து வந்த குறித்த பெண் 8 அடி ஆழமான கழிவறை குழியில் விழுந் துள்ளார்.*

*பாதுகாப்பற்ற கழிவறை குழியில் விழுந்த பெண் பிரதேசவாசிகளால் மீட்கப் பட்டு ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டார்.*


*இந்தநிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த பெண் உயிரிழந்தார்.*

*உயிரிழந்த பெண் 68 வயதுடைய பன்னிப் பிட்டிய பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக் கப்படுகிறது.*

*சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.*

*(அ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பெப்ரவரி - 06 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - தை 22
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : துவாதசி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள். மேலதிகாரி குறை கூறுவார்.

**இடபம்**
உங்கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனங்களால் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**கடகம்**
பிள்ளைகளின் உயர்கல்விகுறித்து யோசிப்பீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். கனவு நனவாகும்.

**சிம்மம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**கன்னி**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அலுவலகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். நினைத்தது நிறைவேறும்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக்கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**தனுசு**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர் பக்கபலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**கும்பம்**
அனுபவப் பூர்வமாகவும் அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

# தமிழக மீனவர் கைது தொடர்வது ஏன்? மத்திய அரசிடம் உயர்நீதிமன்று கேள்வி

சென்னை, பெப். 06

கச்சதீவு அருகில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர் நிகழ்வாக இருப்பதைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்று மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மீனவர் பாதுகாப்பு அமைப்பு தாக்கல் செய்த மனுவில், 'கச்சதீவு பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமநாதபுரத்தைச் சேர்ந்த 6 மீனவர்களை இலங்கை கடற்படையினர் ஜனவரி 22ஆம் திகதி கைது செய்துள்ளனர். எனவே, இலங்கை கடற்படையால், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க, மத்திய - மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும்' என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. "கச்சதீவு ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு செயல்படுகிறது. கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்க தூதரக அளவில் நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் - என்று வாதிட்டார்.

தமிழக அரசு தரப்பில் முன்னிலையான தலைமை வழக்கறிஞர், "கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அரசுக்கு, தமிழக முதல்வர் கடிதம் அனுப்பியிருக்கிறார். கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கு ஒரு நாளைக்கு 250 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படுகிறது" என்று தெரிவித்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், "மீனவர்கள் கைது நடவடிக்கை என்பது தொடர் நிகழ்வாக இருக்கிறது. இதை தடுக்க ஏன் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை? ஏன் இந்த நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்கிறது?" என கேள்வி எழுப்பினர். பின்னர், இந்த வழக்கு தொடர்பாக மத்திய - மாநில அரசுகள் விளக்கமளிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை மார்ச் 11ஆம் திகதிக்கு தள்ளிவைத்தனர். (ஐ)

# இலங்கை கடற்படையை கண்டித்து காங்கிரஸ் 10ஆம் திகதி போராட்டம்

சென்னை, பெப். 06


தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதைக் கண்டித்து வரும் 10ஆம் திகதி பாம்பனில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மு.க. அழகிரி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தியாவின் ஒட்டுமொத்த கடற்கரையில் 13 சதவிகித கடற்கரை பகுதி தமிழகத்தில் இருக்கிறது. 1076 கி. மீ. நீளம் கொண்ட தமிழக கடற்கரையில் ஆயிரக்கணக்கான மீனவர் கிராமங்களும் இலட்சக்கணக்கான மீனவர் மக்களும் காலம் காலமாக வசித்துக் கொண்டு மீன்பிடி தொழில் செய்து வருகிறார்கள். ஆனால், அவர்கள் மீன்பிடித் தொழிலில் இலங்கை கடற்படையினரால் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. இதன்மூலம், அவர்களது வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் இதுவரை 69 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டும் 240 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்கள் விடுதலை செய்யப்படுகின்ற போதிலும், 45 மீனவர்கள் இன்றும் சிறையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் மீனவர் விவகாரத்தில் நடவடிக்கை எடுக்காத பா. ஜ. கவை கண்டித்தும்



இலங்கை கடற்படையை கண்டித்தும் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை இராமேஸ்வர கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்- என்றுள்ளது.

(ஐ)

# பா. ஜ. க. தலைமை கூட்டணியில் அ. தி. மு. கவை சேர்க்க முயற்சி!

சென்னை, பெப். 06

பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் அ. தி. மு. க., பா. ம. க., தே. மு. தி. க. உள்ளிட்ட கட்சிகளை இணைக்கும் முயற்சியில் த. மா. கா. தலைவர் ஜி. கே. வாசன் தீவிரமாக களமிறங்கியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தமிழகம் வருவதற்குள் இந்தப் பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளது. இதில் வென்று பா. ஜ. கவை வீழ்த்த எதிர்க்கட்சிகள் இந்தியா கூட்டணியை உருவாக்கியுள்ளன. இந்தக் கூட்டணி சற்று தடுமாறுகிற போதிலும், தமிழகத்தைப் பொறுத்தவரை பா. ஜ. கவும் பலமில்லாத நிலையிலேயே உள்ளது.

பா. ஜ. க. தலைமையிலான, தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகளை தக்கவைக்கவும் கூடுதலாக கட்சிகளை கூட்டணியில் சேர்க்கவும் தமிழகத்தில் குறிப்பிட்ட தொகுதிகளை கைப்பற்றவும் அந்தக் கட்சி வியூகங்களை வகுத்துள்ளது.

இதனிடையே, அ. தி. மு. க. அந்தக் கூட்டணியில் இருந்து விலகியது. இது அந்தக் கூட்டணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், அ. தி. மு. க. வசமிருந்த அதேநேரம், பா. ம. க., தே. மு. தி.கவுடன், தி. மு. க. கூட்டணியில் உள்ள சில கட்சிகளையும் தங்கள் பக்கம் கொண்டு வந்து, அ. தி. மு. க. கூட்டணியை பலப்படுத்தவும் பழனிசாமி முயற்சி மேற்கொண்டு வருகிறார். திமுக கூட்டணியில் கேட்ட தொகுதிகள் கிடைக்காத நிலையில், சில கட்சிகள் அதிமுக கூட்டணிக்கு செல்ல வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், அ. தி. மு. கவை தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைத்து பலப்படுத்தும் முயற்சியில் த. மா. கா. தலைவர் ஜி. கே. வாசனை பா. ஜ. க. களமிறக்கியுள்ளது.

இதையொட்டி, பா. ஜ. க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டாவை சந்தித்த ஜி. கே. வாசன் கூட்டணி ஒருங்கிணைப்பு தொடர்பாக தீவிர ஆலோசனை நடத்தியுள்ளார். அப்போது, கூட்டணியில் இணையும் கட்சிகளுக்கு மத்திய அமைச்சர் பதவி வழங்குவது உள்ளிட்டவை தொடர்பாக நட்டா உறுதி அளித்ததாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து, அ. தி. மு. கவை மீண்டும் கூட்டணியில் சேர்க்க ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலையிடம் ஜி. கே. வாசன் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து ஜி. கே. வாசன் நேற்று பழனிசாமியை சந்தித்துப் பேசியுள்ளார். பிரதமர் நரேந்திர மோடி வரும் 18ஆம் திகதி தமிழகம் வரவுள்ளார். அதற்குள், பா. ஜ. க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஒருங்கிணைப்பு பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டிவிடும் என கூறப்படுகிறது.

(ஐ)

# தேசபந்து தென்னக்கோனின் பதவிக்காலம் நீடிக்கப்படுமா?

## ஜனாதிபதியின் தீர்மானத்துக்காக காத்திருக்கும் பொலிஸ் திணைக்களம்

கொழும்பு, பெப். 06

**பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பதவிக்காலம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்திற்காக பொலிஸ் திணைக்களம் காத்திருக்கிறது.**



தேசபந்து தென்னக்கோனின் பதவிக்காலம் இம்மாத இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவரது பதவிக்காலம் நீடிக்கப்படுமா என்பது தொடர்பில் இதுவரை உறுதியாகவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி செயலகத்தின் அறிவிப்பிற்காக காத்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் நான்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்ட சி.டி. விக்ரமரத்ன ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கடந்த ஆண்டு நவம்பரில் பதில் பொலிஸ் மா அதிபராக கடமையேற்றார்.

தேசபந்து தென்னக்கோனின் நியமனத்தை அரசியலமைப்பு சபை அங்கீகரித்த போதிலும், 2022 மே 9 அன்று காலி முகத்திடல் போராட்ட தளத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னர் அவருக்கு எதிராக கடுமையான எதிர்ப்புக்கள் அதிகரித்தன.

இதன்படி, அவரது தவிக்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரி கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட பலர் மனுக்களை தாக்கல் செய்த நிலையில் அவை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு விசாரணைக்கும் எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சவப்பெட்டியுடன் மயானம் சென்றார் மேர்வின் சில்வா!

கொழும்பு, பெப். 06

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உட்பட சிலர் நேற்று முன் தினம் மாலை பொரளை மயானத்துக்கு சவப்பெட்டியுடன் சென்றுள்ளனர்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இவ்வாறு அவர்கள் சவப்பெட்டியுடன் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த குழுவினர் பொரளை மயானத்துக்குள் பிரவேசிக்க முற்பட்டபோது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அதனை எதிர்த்ததால் இரு குழுக்களுக்கு மிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

எனினும் பாதுகாப்பு அதிகாரிகளின் எதிர்ப்பையும் மீறி முன்னாள் அமைச்சர் உள்ளிட்டோர் உள்ளே நுழைந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

(அ)



# நெடுந்தீவில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு மறியல்!

யாழ்ப்பாணம், பெப். 06

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டின் கீழ் நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் இதன்போது பறிமுதல் செய்யப்பட்டன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மயிலிட்டித் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு வைத்து நீரியல்வள திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டனர்.

பின்னர் 23 மீனவர்களும் ஊர்காவற்துறை நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதாக யாழ்ப்பாண மாவட்ட நீரியல்வள திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்தார். (அ)

# மஹிந்த யாப்பாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, பெப். 06

உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த விடயங்களில் 9 விடயங்கள் உள்ளீர்க்கப்படாது இணையப் பாதுகாப்புச் சட்டம் அமுல்படுத்திய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த சட்டம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் உள்ளடக்கத்தையும் உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த விடயங்களையும் ஒப்பிட்ட போது 9 விடயங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

உயர்நீதிமன்றம் சட்டமூலமொன்று தொடர்பில் பரிந்துரைகளை வழங்குகின்ற போது அதனை உள்ளீர்த்தே சட்டமூலம், சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும் என அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே உயர் நீதிமன்றத்தின் 9 பரிந்துரைகளை புறந்தள்ளி சபாநாயகர் இணையப் பாதுகாப்புச் சட்டத்தினை சன்றுரை வழங்கிய செயற்பாட்டுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரவுள்ளோம்-என்றார். (அ)

# புனர்வாழ்வு உத்தியோகத்தர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, பெப். 06

சிறைச்சாலை திணைக்களத்தைச் சேர்ந்த புனர்வாழ்வு உத்தியோகத்தர் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் மொனராகலையில் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை சிறைச்சாலையில் புனர்வாழ்வு அதிகாரியாக கடமையாற்றும் சியம்பலாண்டுவ பகுதியை சேர்ந்த 43 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த அதிகாரி சில காலமாக மொனராகலை சிறைச்சாலைக்கு ஹெரோயின் மற்றும் ஐஸ் விநியோகம் செய்வதாகவும், அப்பகுதியிலுள்ள போதைப்பொருள் வியாபாரிகளுக்கு ஹெரோயின் மற்றும் ஐஸ் விநியோகிப்பதாகவும் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மொனராகலை வைத்தியசாலைக்கு முன்பாக மொனராகலை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினர் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சோதனையின் போது அவரிடமிருந்த ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மொனராகலை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருவதுடன், சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கந்தக்காட்டில் மீண்டும் மோதல்!

கொழும்பு, பெப். 06

பொலனறுவை, வெலிகந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையே நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உட்பட 10 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், இருவர் தப்பியோடியுள்ளனர் எனவும் வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் இருகுழுக்களுக்கிடையில் நேற்று முன் தினம் மாலை 4.30 மணியளவில் மோதல் ஏற்பட்டது.

அதனைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முற்பட்ட இராணுவத்தினரில் ஒருவரும், மோதலில் இந்த மோதல் சம்பவத் திதைப் பயன்படுத்தி கைதிகள் இருவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்யப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஒக்ரோபர் 14 நாட்டுக்கு புதிய ஜனாதிபதி தெரிவு!

## ஹறின் பெர்னாண்டோ கூறுகிறார்



கொழும்பு, பெப். 06

எதிர்வரும் ஒக்ரோபர் 14 ஆம் திகதி நாட்டுக்கு புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவாவார் என காணி மற்றும் இளைஞர், விளையாட்டுத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவ்சிக்கையில்-

ஒக்ரோபர் முதல் வாரம் எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மீண்டும் ஒரு முறையாவது ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கும் பொறுப்பு நாட்டு மக்களுக்கு வழங்கப்படும்.

ஒரு நாட்டை மிகக் குறுகிய காலத்தில் வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றிய உலகின் ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ரணில் விக்கிரமசிங்க நோய்வாய்ப்பட்டவர்களைக் குணப்படுத்தும் சிறந்த வைத்தியர்.

அவர் தயக்கம் காட்டினாலும் மக்கள் இன்னும் ஒரு சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கி நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்க வேண்டும்.

நாட்டின் மூன்று விதமான தேர்தல்களில் வெற்றிபெற்ற குழுக்களில் 47 வீதமானவர்களைக் கண்டுபிடிப்பது கனவாகவே காணப்படுகிறது.

அந்தக் கனவுகள் ஒருபோதும் நனவாகாது-என்றார்.

(அ)

# கெஹலியவுக்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை?

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டம்

கொழும்பு, பெப். 06

**முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.**

மருந்து கொள்வனவு மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ள முன்னாள் கெஹலிய ரம்புக்வெலவை, அமைச்சரவை யில் இருந்து நீக்குவதற்கு ஜனா திபதி நடவடிக்கை எடுக்காத பட்சத்திலேயே நம்பிக்கையில் லாப் பிரேரணையை முன்வைக்க திட்டமிடப்பட் டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வரு கின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் தெரிவித்தார்.

கெஹலிய ரம்புக்வெல சுகா தார அமைச்சராக இருந்தபோது அவருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரே ரணையொன்றை கொண்டுவந் தது. எனினும், அது தோற்கடிக் கப்பட்டது. ஆனால் கெஹலிய ரம்புக்வெலவிடம் இருந்து சுகா தார அமைச்சு பறிக்கப்பட்டு, அது ரமேஷ் பத்திரனவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இருந்தபோதிலும் கெஹ லிய ரம்புக்வெல அமைச்சரவை யில் நீடித்தார். (அ)

# சகலருக்கும் வரி எண் திட்டம் பிற்போடப்படும் சாத்தியம்!

## 2.5 பில்லியன் ரூபா தேவைப்பாடு மனித வளமும் பற்றாக்குறை

கொழும்பு, பெப். 06

18 வயது நிரம்பிய ஒவ்வொ ருவருக்கும் வரி எண் வழங்க வேண்டும் என்ற அரசின் தீர்மா னம் பிற்போடப்படும் சாத்தி யம் உள்ளதாக செய்திகள் தெரி விக்கின்றன.

குறித்த விடயம், எதிர்பார்த் ததைவிட கடினமானது என்றும், அதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்றும் ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முறையை நடைமுறைப் படுத்துவதற்கு 2.5 பில்லியன் ரூபா தேவைப்படுவதாக உள் நாட்டு இறைவரித் திணைக்க ளம் நிதியமைச்சுக்கு அறிவித் துள்ளது.

முக்கியமாக, ரின் எனப்ப டும் வரி எண்ணை, எண் பெறத் தகுதியானவர்களுக்கு, தபாலில் அனுப்பவேண்டியுள்ளது. அதற் கான தபால் கட்டணத்துக்காக பாரிய தொகை செலவாகும்.

மேலும், இந்த வேலைத்திட் டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு தேவையான மனித வளம் தன்னிடம் இல்லை என உள்நாட்டு இறைவரி திணைக்க ளம் தெரிவித்துள்ளது. (அ)

# விவசாயிகளின் கணக்குகளில் 9.6 பில்லியன் ரூபாய் வைப்பு!

கொழும்பு, பெப். 06

எதிர்வரும் பெரும்போக நெற்பயிர் செய்கைக்கான உரக் கொள்வனவு உள்ளிட்ட நடவ டிக்கைகளுக்காக விவசாயிக ளின் கணக்குகளில் 9.6 பில்லி யன் ரூபாய் வரவு வைக்கப்பட் டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு ஹெக்ரேய ருக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

இந்நிலையில், மேலும் 450 மில்லியன் ரூபாவை இன்றைய தினம் விவசாயிகளின் கணக்கு களில் வரவு வைக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

# வனஜீவராசிகள் அலுவலக அதிகாரி காட்டு யானை தாக்கியதில் காயம்!

கொழும்பு, பெப். 06

காட்டு யானையை விரட்ட முற்பட்ட வனஜீவராசிகள் அலுவலக அதிகாரி ஒருவர் காட்டு யானையின் தாக்குத லுக்கு இலக்காகி படுகாயம டைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிரிந்த - தலதாகம பிரதேசத் தில் இந்த சம்பவம் இடம்பெற் றுள்ளதுடன் தாக்குதலுக்கு இலக்கான அதிகாரி அம்பாந் தோட்டை பொது வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

காட்டு யானை தாக்கியதில் இவருடைய மூன்று விலா எலும்புகள் உடைந்துள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேல திக விசாரணைகளை கிரிந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பணத்தை விடுவிக்குமாறு பொன்சேகா கோரிக்கை!

கொழும்பு, பெப். 06

2010 ஆம் ஆண்டு ஜனாதிப தித் தேர்தலின்போது தமக்குக் கிடைத்த 527,000 அமெரிக்க டொலர்கள் மற்றும் 100 ஸ்ரே லிங் பவுண்ட்ஸ் பணத்தை விடு விக்குமாறு பாராளுமன்ற உறுப் பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும், தனியார் வங்கி யொன்றின் பெட்டகத்தில் வைக் கப்பட்டிருந்த குறித்த பணத் தில் பெருந்தொகையானவை கறையான்களால் சேதப்படுத் தப்பட்டுள்ளதாக ஆங்கில ஊட கம் ஒன்று செய்தி வெளியிட் டிருந்தது.

2010 ஆம் ஆண்டு ஜனாதிப தித் தேர்தலின்போது, பாராளு மன்ற உறுப்பினர் பீல்ட் மார் ஷல் சரத் பொன்சேகா, தமது பிரசார நன்கொடையாக குறித்த பணத்தை பெற்றிருந்தார்.

இது இலங்கை நாணயப் பெறுமதியில் சுமார் 16 கோடியே 45 இலட்சம் ரூபாவென தெரி விக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த பணம் இலங்கையில் உள்ள தனியார் வங்கியொன்றில் வைப் பிலிடப்பட்டிருந்த நிலையில், பரிவர்த்தனை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பின்னர் அந்தப் பணத்தை முடக்குவதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

குறித்த பணத்தை தமது மக ளின் கணவரின் தாயார் தற்காலி கமாக வைத்து கொள் வதற்காக வழங்கப்பட்டுள்ளதாக சரத் பொன்சேகா முன்னதாக தெரி வித்திருந்தார்.

இந்நிலையில், குறித்த பெண் ணுக்கு எதிராக உயர் நீதிமன் றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், பரிவர்த்தனை கட் டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தாம் குற்றத்தை ஒப்புக்கொண் டதாகவும் அந்தப் பணம் சரத் பொன்சேகாவுக்கு சொந்தமா னது எனவும் சட்டமா அதிபர் மற்றும் நீதிமன்றத்துக்கு அவர் அறிவித்திருந்தார்.

இதன்படி, சரத் பொன்சேகா உரிய பணத்தை கோரி நீதிமன் றத்தில் சத்தியக் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

பணத்தை விடுவிப்பதா இல் லையா என்பதை நிதியமைச்சு தீர்மானிக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதன்படி, உரிய பணத்தை விடுவிக்குமாறு சரத் பொன் சேகா நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவிடம் வினவியபோது அதற்கு பதிலளித்த அவர், குறித்த பணத்தை விடுவிக்கு மாறு பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளதாகவும் எனினும் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். (அ)

# நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவிருந்த கைதி கைவிலங்கை கழற்றி தப்பினார்!

கொழும்பு, பெப். 06

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை களுத்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த முற்பட்டபோது அவர்களில் ஒருவர் மற்றுமொரு சந்தேக நபரை தாக்கி கைவிலங்குகளை கழற்றிவிட்டு தப்பிச்சென்றுள் ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர் களுத்துறை - அளுத்கம பிரதே சத்தை சேர்ந்தவராவார்.

இவர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் போதைப்பொருள் வைத்திருந்தமை மற்றும் திருட்டு சம்பவம் தொடர்பில் களுத்துறை நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் இவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட் டிருந்தது.

இதனையடுத்து இவரை கைது செய்த பொலிஸார் மற்று மொரு சந்தேக நபருடன் கைவி லங்கிட்டு அளுத்கம பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் இருவரின் பாதுகாப்பில் ஜீப் ரக வண்டியில் நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது பொலிஸார் இரு சந்தேக நபர்களையும் நீதி மன்ற வளாகத்தில் ஜீப்பில் இருந்து இறக்க முற்பட்டபோது குறித்த சந்தேக நபர் மற்றுமொரு சந்தேக நபரை தாக்கி கைவிலங் குகளை கழற்றி ஜீப்பில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது அவர்களை அழைத்துச் சென்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர் கள், நீதிமன்றில் இருந்த ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கிருந்த பொதுமக் கள் சந்தேக நபரை துரத்திச் சென்றபோதும் அவர் அங்கி ருந்து தப்பிச்சென்றுள்ளார். (அ)

# தப்பிய கைதி சிக்கினார்!

கொழும்பு, பெப். 06

வீரவில திறந்தவெளி சிறைச் சாலையில் இருந்து தப்பிச்சென்ற கைதியொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர், நேற்று முன் தினம் சிறைச்சாலை முகாமில் பணிபு ரியும் புனர்வாழ்வு உத்தியோ கத்தர் ஒருவரது மோட்டார் சைக்கிள் மூலம் தப்பிச்சென்ற நிலையில் தெபரவெவ பாடசா லைக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டார்.

தப்பியோடிய, குறித்த நப ருக்கு போதைப்பொருள் குற்றச் சாட்டு தொடர்பில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றி னால் சிறைத்தண்டனை விதிக் கப்பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)

## பெண் கான்ஸ்டபிள் துஷ்பிரயோகம்

# பொறுப்பதிகாரியின் இடமாற்றம் அரசியல் அழுத்தங்களால் இரத்து!

கொழும்பு, பெப். 06

பயிலுநர் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைப் பாலி யல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் கற்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரி தொடர்பில் விசே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

வடமேற்கு மாகாணத்துக் குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய, கட்டுப்பெத்த பொலிஸ் பிரிவின் சிறுவர் மற் றும் மகளிர் பணியகத்தினால் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கற்பிட்டி பொலிஸ் பொறுப் பதிகாரியான இவர் மீது பாலி யல் துஷ்பிரயோகம் தொடர் பில் பல முறைப்பாடுகள் செய் யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள் ளது.

இதனையடுத்து உடனடி யாக அமுலுக்கு வரும் வகை யில் குறித்த அதிகாரியை வட மத்திய மாகாணத்துக்கு இட மாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தபோதிலும், அரசி யல் அழுத்தங்கள் காரணமாக அவரின் இடமாற்றத்தை இரத் துச் செய்ய நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை, சம்பவத்து டன் தொடர்புடைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் வாக்குமூலம் பெறுவதற்காக கடந்த 29 ஆம் திகதி கட்டுப் பெத்த பொலிஸ் பிரிவின் சிறு வர் மற்றும் மகளிர் பணியகத்தி னர் கற்பிட்டி பொலிஸ் நிலை யத்துக்குச் சென்றிருந்தபோதும் பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரி சுகயீன லீவில் சென்றுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புதிய தலைமைத்துவம் இலங்கைக்கு வேண்டும்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் வலியுறுத்து

**கொழும்பு, பெப். 06**

**இலங்கை புதிய தலைமைத்துவத்துக்கு மாறவேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளார்.**



சுதந்திரத்தின் பின்னர் சிங்கப்பூரும் இலங்கையும் பின்பற்றிய அணுகுமுறைகளில் உள்ள வித்தியாசங்களை சுட்டிக்காட்டியுள்ள அவர், சிங்கப்பூர் ஐக்கியத்துக்கும் தனது மக்களின் நலனுக்கும் முக்கியத்துவம் கொடுத்தது என தெரிவித்துள்ளதுடன் இலங்கையின் தலைமைத்துவம் மதமொழி அடிப்படையில் சமூகங்களை பிரித்ததையும் கடுமையாக கண்டித்தார்.

சிங்கப்பூரின் வலுவான சட்ட அமைப்பினை பாராட்டியுள்ள அவர், அது ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது எனவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் சட்டம் ஒழுங்கு அலட்சியம் செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை அரசாங்கம் சுயநலம் மிக்க நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கின்றது. தேசத்தின் நலனை விட தனிப்பட்ட நலனுக்கு முன்னுரிமையளிக்கின்றது எனவும் தெரிவித்துள்ள கர்தினால், அரசியல் பொருளாதார நெருக்கடிகள் காணப்படும் சூழ்நிலையில் சுதந்திர தினக் கொண்டாட்டங்களின் நியாயத்தன்மை குறித்து கேள்வி எழுப்பினர்.

தேசம் ஒடுக்குமுறைமிக்க ஆளும் வர்க்கத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டும் என தெரிவித்த கர்தினால், நாட்டையும் பல்வேறுபட்ட மக்களையும் நேசிக்கும் தலைவர்களை தெரிவு செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (அ)

# மலையகம், கிழக்கு அபிவிருத்தி குறித்து இந்திய தூதர்- செந்தில் கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 06

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா வை, கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்திய தூதரகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் அபிவிருத்திக்கு தேவையான உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதன்போது இலங்கையின் அபிவிருத்திக்கு முழுமையான உதவிகள் வழங்கப்படும் என இந்திய தூதுவர் உறுதியளித்துள்ளார். (அ)



# இலங்கையின் சக்தி வலு சுயாதீனத்தை இந்தியா வெகுவிரைவில் ஆக்கிரமிக்கும்

## கூறுகின்றார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, பெப். 06

இலங்கையின் சக்தி வலுவின் சுயாதீனத்தை வெகுவிரைவில் இந்தியா ஆக்கிரமிக்கும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கம் ஜனாதிபதிக்கு கிடையாது. நெருக்கடிகளை தீவிரத்தபடுத்தி மேற்குலகத்தை மகிழ்விக்க முயற்சிக்கிறார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கடுவலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு கோட்டாபய மாத்திரம் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பொருளாதார நெருக்கடி என்ற சிசு கோட்டாவின் ஆட்சியில் பிறந்ததால் நெருக்கடிகள் தீவிரமடைந்தன. அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய முறையாக செயற்பட்டிருந்தால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்திருக்காது.

1991 ஆம் ஆண்டு இந்தியா பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்க்கொண்டது. ஒரு வாரத்துக்கு தேவையான வெளிநாட்டு கையிருப்பு மாத்திரமே இந்தியாவின் வசமிருந்தது.

அவ்வாறான நிலையில் அப்போதைய இந்திய பிரதமர் பொருளாதார நிபுணரான மன்மோகன் சிங்கை நாட்டுக்கு வரவழைத்து அவரை நிதியமைச்சராக்கினார்.

பொருளாதாரத்தை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள், அரசியலை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று இந்திய பிரதமர் உறுதியளித்ததை தொடர்ந்து மன்மோகன் சிங் இந்திய பொருளாதாரத்தை பலப்படுத்தினார். விழுந்த இடத்தில் இருந்து எழுந்து இன்று இந்தியா பொருளாதார முன்னேற்றத்தில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. தேசிய உற்பத்திகளை வலுப்படுத்தி அமுல்படுத்திய செயற்திட்டங்களால் இந்தியா இன்று வலுவான நிலையில் உள்ளது.

பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்த சூழ்நிலையில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய பொருளாதாரம் தொடர்பில் அடிப்படை தகைமைகூட இல்லாத பஸில் ராஜபக்ஷவை நிதியமைச்சராக நியமித்தார். பொருளாதார நெருக்கடி தொடர்பில் அமைச்சரவையில் எழுப்பிய கேள்விகளுக்கு பஸில் ராஜபக்ஷ பதிலளிக்கவில்லை. சகோதரர் என்பதால் கோட்டாபயவும் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டார். இறுதியில் நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்காகவே ராஜபக்ஷர்கள் உட்பட பொதுஜன பெரமுனர் ரணில் விக்கிமசிங்கவை ஜனாதிபதியாக்கினார்கள். பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளும் செயற்பாடுகள் மாத்திரமே முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. மன்னார் காற்றாலையின் பெரும்பாலான பங்கு இந்தியாவின் அதானி நிறுவனத்திடம் உள்ளது. இலங்கையின் சக்தி வலுவின் சுயாதீனத்தை இந்தியா வெகுவிரைவில் ஆக்கிரமிக்கும்-என்றார். (அ)

# பாதாள உலகக் குழுக்கள் மேற்கொள்ளும் கொலைகளுடன் படையினருக்கு தொடர்பு

## அதிகாரிகள் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்

கொழும்பு, பெப். 06

பாதாள உலகக்குழுக்களால் மேற்கொள்ளப்படும் கொலைகளுடன் சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப்படை உறுப்பினர்களுக்கு தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளதை அடுத்து, படை முகாம்களில் இருந்து துப்பாக்கிகளை வெளியில் எடுத்துச் செல்வது சம்பந்தமாக கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

படைச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கி ஒன்றைப் பெற்றுக் கொண்ட பின்னர், அதனை உரிய நேரத்தில் திருப்பி ஒப்படைத்தாரா என்பது குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

இதனை தவிர படை முகாம் மட்டத்தில் ஆயுதங்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கையும் பெறப்பட்டு வருகிறது.

குறிப்பாக ஆயுத களஞ்சியத்துக்கு பொறுப்பாளர்களை நியமிக்கும்போது, அவர்கள் குறித்து கூடுதல் கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதுடன் அவர்களின் நடத்தைகள் தொடர்பில் கடுமையான பரிசோதனைகள் நடத்தப்படுகிறது.

ஏற்கனவே குற்றச்செயல்களில் சம்பந்தப்படாத நபர்களை தெரிவு செய்து, அவர்களுக்கு ஆயுதக் களஞ்சியங்களுக்கான பொறுப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் சைபர் கண்காணிப்பு முறை ஊடாக படையினரின் சந்தேகத்திற்குரிய செயல்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் நடந்த கொலைச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படும் படையினர், பொருளாதார சிரமங்கள் மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாகி உள்ளதன் காரணமாகவே பாதாள உலகக்குழுக்களுடன் சம்பந்தப்பட்டு செயற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், படை உறுப்பினர்கள் இப்படியான சமூக விரோத செயல்களை நோக்கிச் செல்வதைத் தடுக்கும் நோக்கில், படை முகாம்களில் பிரதி புதன் கிழமை தோறும் மனநல ஆலோசனை சேவைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

படை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட பாதாள உலகச் செயற்பாடுகள் தொடர்பான சில செய்திகள் அண்மையில் வெளியாகி இருந்தன.

அம்பலங்கொடை நகரில் மீன் வியாபாரி ஒருவரை கொலை செய்ய சென்றிருந்த இராணுவ வீரர் உட்பட இரண்டு பேர் விசேட அதிரடிப்படையினரால் துப்பாக்கி மற்றும் 10 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்டனர்.

தற்போது டுபாய் நாட்டில் வசித்து வரும், அஹூங்கல்ல, கொஸ்கொட, பலப்பிட்டிய பிரதேசங்களை மையமாக கொண்டு பாதாள உலகச் செயற்பாடுகள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் ஒருவர் வழங்கிய ஒப்பந்தத்திற்கு அமைய இந்த சந்தேக நபர்கள், மீன் வியாபாரியை கொலை செய்யச் சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இராணுவ வீரர் கைது செய்யப்படும் போது தான் இராணுவத்தில் கடமையாற்றுவதை பொலிஸாரிடம் மறைத்துள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படைகளின் முன்னாள் உறுப்பினர்களும் பாதாள உலகக்குழுக்கள் சம்பந்தப்பட்ட கொலை சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

முகாம்களில் கடமையில் இருக்கும் நேரத்தில் தமக்கு வழங்கப்படும் துப்பாக்கியை வெளியில் எடுத்துச் சென்று கொலைகளைச் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும் பொலியத்தை பிரதேசத்தில் 5 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் முன்னாள் கடற்படை வீரருக்கு தொடர்பு இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த கொலைகளை முன்னாள் இராணுவ மேஜர் வழிநடத்தியுள்ளதும் தெரியவந்தது. சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் கடற்படை வீரர், டுபாய் நாட்டுக்கு தப்பிச் சென்று கொஸ்கொட சுஜீ உட்பட பாதாள உலக தலைவர்களுடன் தங்கியுள்ளார்.

அவரது மனைவி மற்றும் மாமனாரை பொலிஸார் ஹெரோயின் போதைப் பொருளுடன் அண்மையில் கைது செய்தனர்.

இந்த நிலையில், பாதாள உலகக்குழுக்களின் கொலைகளுடன் படையினருக்கு தொடர்பு இருப்பது சம்பந்தமாக பாதுகாப்பு பிரதானிகளின் உயர் மட்ட கலந்துரையாடல் ஒன்றும் நடந்துள்ளது. (அ)

# பிரதேச செயலக பணியாளர் உள்ளிட்ட மூவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது!

மட்டக்களப்பு, பெப். 06

**மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் கடமை யாற்றும் போதைப்பொருள் வியாபாரி ஒருவர் உட்பட மூவரை 4 கிராம் 760 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளு டன் கல்லடி பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலி ஸார் தெரிவித்தனர்.**

விசேட அதிரடிப்படையின ருக்கு கிடைத்த தகவல் ஒன்றி னையடுத்து இந்த கைது நடவ டிக்கை இடம்பெற்றுள்ளது.

கல்லடி பகுதியிலுள்ள வீதி ஒன்றில் கண்காணிப்பில் ஈடு பட்டுக் கொண்டிருந்தபோது அங்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஐஸ் போதைப்பொ ருளை எடுத்துக்கொண்டு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவரையும் அதனை வாங்க வந்த இருவரையும் அங் கிருந்த விசேட அதிரடிப்படை யினர் சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்ததுடன் அவர்களிடமி ருந்து 4 கிராம் 760 மில்லிக்கி ராம் ஐஸ் போதைப்பொருள், மோட்டார் சைக்கிள் ஒன்று, இரண்டு கையடக்கத் தொலை பேசிகள் ஆகியவற்றை மீட்ட னர்.

இதில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் வியாபாரி பட்டிப்பளை பிரதேச செயலகத் தில் கடமையாற்றிவரும் கல்லடி பகுதியைச் சேர்ந்தவர் எனவும், இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கிழக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தை ரத்து செய்க!

## ஹரீஸ் எம்.பியிடம் கோரிக்கை

அம்பாறை, பெப். 06

வெளியாகியுள்ள கிழக்கு மாகாண வருடாந்த ஆசிரியர் இடமாற்ற பட்டியலில் திருப்தி இல்லை என்றும், அந்த பட்டிய லில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளதாகவும், கல்முனை கல்வி வலய எதிர்காலக் கல்வி முன் னேற்றத்தை பின்னுக்கு தள்ளும் விதமாக அந்த இடமாற்றப் பட் டியல் அமைந்துள்ளதாகவும் தெரிவித்து இவ்விடயத்தை உட னடியாக கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி கல்முனை கல்வி வலய அதிபர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் பல்வேறுபட்ட ஆசிரிய தொழிற்சங்கங்களை யும் சேர்ந்த பிரதிநிதிகளை உள் ளடக்கிய கல்முனை அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க சம்மேள னம் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஷிடம் கோரிக்கை விடுத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினரின் கல்முனை செயலகத்தில் நேற்று கல்முனை அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சம்மேளன பிரதிநிதிகள் முஸ்லிம் காங்கிர ஸின் பிரதித் தலைவரும், முன் னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினர் சட் டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களை சந்தித்து இது தொடர் பில் கலந்துரையாடினர். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுதந்திர தின நிகழ்வும் மரநடுகையும்!



அம்பாறை, பெப். 06

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத் தில் சுதந்திர தின நிகழ்வும் மரந டுகையும் பதில் பதிவாளர் எம். ஐ. நௌபர் தலைமையில் இடம் பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழ கத்தில் இடம்பெற்ற நிகழ்வுக ளில் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல். மஜீத், சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல், பல்கலைக்க ழக வேலை பகுதியின் பொறியி யலாளர் எம்.எஸ்.எம். பஸில், பிரதம பாதுகாப்பு அதிகாரி ஏ.எம்.ஜாபிர், விரிவுரையாளர் கள், நிர்வாக மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பல்கலைக்கழக பாதுகாப்பு தரப்பினரின் அணி வகுப்பு மரியாதை நிகழ்வும் இடம்பெற்றது. (அ)

# கல்முனை வைத்தியசாலையில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வு

அம்பாறை, பெப். 06

நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை யில் 76 ஆவது சுதந்திர தின விழா சிறப்பான முறையில் கொண்டா டப்பட்டது.

இந்நிகழ்வு வைத்தியசாலை யின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர். இரா. முரளீஸ் வரன் தலைமையில் இடம்பெற் றது.

வைத்தியசாலையின் பணிப் பாளர் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரனால் தேசியக் கொடி ஏற்றலுடன் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் அணி வகுப்பு இடம்பெற்று தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தப் பட்டது.

பணிப்பாளரினால் சிறப்புரை வழங்கப்பட்டது.

தனது உரையில், வைத்திய சாலையில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்க ளும் இக்கட்டான நிலையில் சிறந்த முறையில் கடமையாற்று வதை பாராட்டியதுடன் வைத் தியசாலைக்கு வரும் நோயாளிக ளுக்கு திருப்தியான சிறந்த சேவையை வழங்குவதற்கு ஆலோசனையும் வழங்கியதோடு எந் நிலை வந்தாலும் அவற்றை வென்று சிறந்ததொரு வைத்திய சேவையை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் இதேபோன்று சிறந்த சேவைகளை நோயாளர்களுக்கு வழங்கி எமது பிரதேச வாழ் மக்களுக்கு மிகச் சிறந்த மருத் துவ சேவை கிடைக்க வேண் டும் என்று கேட்டுக்கொண் டார்.



இந்த சுதந்திர தினத்தில் அனைவருக்கும் பாராட்டுக்க ளையும் நன்றியையும் தெரிவித் தார்.

இந்நிகழ்வில் வைத்தியசா லையின் கணக்காளர் எம். கேந்திரமூர்த்தி, தாதியபரிபால கர் என்று.சசிதரன், தாதியபரி பாலகி திருமதி எல்.சுஜேந்தி ரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள், பிரதான சுகா தார முகாமைத்துவ உதவியா ளர் திருமதி.ரோஷி சுகுமார் மற் றும் விடுதி பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்கள், பொறுப்பு உத்தியோகத்தர்கள், தாதிய உத் தியோகத்தர்கள், துணை மருத் துவ சேவை உத்தியோகத்தர்கள், நிறைவுகான் தொழில் வல்லு னர் சேவை உத்தியோகத்தர்கள், குடும்ப நல சுகாதார உத்தியோ கத்தர்கள், விடுதி மேற்பார்வை உத்தியோகத்தர்கள், சிற்றூழிய மேற்பார்வையாளர்கள் மற்றும் சுகாதார உதவியாளர்களும், ஊழியர்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தனர். (அ)



# பாண்டிருப்பு பெரியகுளத்தில் மரம் நடுகை வேலைத்திட்டம்

அம்பாறை, பெப். 06

76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுற்றாடல் முன்னோ டிகளால் பாரிய மர நடுகை வேலைத்திட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இதில் கல்முனை பிரதேச செயலகம் (வடக்கு) பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், மத்திய சுற்றாடல் அதிகாரசபை யின் கல்முனை பிராந்திய சுற்றா டல் உத்தியோகத்தர் திருமதி. புஷ்பராஜினி செவ்வேட்குமரன் மற்றும் வனபரிபாலன திணைக் கள உத்தியோகத்தர்கள் உட்பட பலர் பங்கேற்றனர். (அ)

# காத்தான்குடியில் இரத்ததானம்

மட்டக்களப்பு, பெப். 06

காத்தான்குடி சுயாதீன ஊட கவியலாளர் போரத்தின் ஏற் பாட்டில் இரத்ததான முகாம் அல் அமீன் மகா வித்தியாலயத் தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் எம். எச்.எம்.அன்வர் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் காத் தான்குடி தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியச்சகர் எம். எஸ்.எம். ஜாபிர் மற்றும் இரத்த வங்கி பொறுப்பதிகாரி அலீமா றகுமான், ஆய்வுக்கும் மேம்பாட் டுக்குமான அமைப்பின் தலைவி அனீசா பிர்தௌஸ் ஆகியோரும்




கலந்து கொண்டனர்.

இரத்ததான முகாமில் 115 பேர் தமது குருதிகளை வழங்கி யமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# பாக். பொலிஸ் நிலையம் மீது நேற்று பயங்கரவாத தாக்குதல்!

## 10 பேர் உயிரிழப்பு



**இஸ்லாமாபாத், பெப். 06**

**பாகிஸ்தானில் உள்ள பொலிஸ் நிலையமொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.**

கைபர்-பக்துன்க்வா மாகாணம், டிராபன் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தின் மீதே நேற்று அதிகாலை 3 மணியளவில், துப்பாக்கிச் சூடு நடத்தியும், பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டும், பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் பொலிஸ் அதிகாரிகள் 10 பேர் உயிரிழந்துள்ளதோடு, 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் குறித்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# விண்வெளியில் அதிக நாட்கள் தங்கியிருந்து ரஷ்யர் சாதனை

## ஆயிரத்து 110 நாட்கள் தங்கியிருந்தார்



மொஸ்கோ, பெப். 06

ரஷ்யாவை சேர்ந்த விண்வெளி வீரரான ஒலெக் கொனொனெங்கோ விண்வெளியில் நீண்ட நாட்கள் தங்கியவர் என்ற சாதனை படைத்துள்ளார்.59 வயதான ஒலெக் கொனொனெங்கோ சுமார் இரண்டரை ஆண்டுகளை விண்வெளியில் தங்கியிருந்தார்.

ஏற்கனவே மற்றுமொரு ரஷ்ய விண்வெளி வீரரான கென்னடி படல்கா 878 நாட்களும் 11 மணி 29 நிமிடம் 48 நொடிகள் விண்வெளியில் தங்கியிருந்து கடந்த 2017 ஆம் ஆண்டு சாதனை படைத்திருந்தார்.

இந்த நிலையில், 5வது முறையாக கடந்த 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் 23ஆம் திகதி விண்வெளிக்கு சென்ற ஒலெக் கொனொனெங்கோ, ஆயிரத்து 110 நாட்கள் விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருந்தார்.

ஒலெக் கொனொனெங்கோ தனது 34ஆவது வயதில் விண்வெளி பயணத்திற்கான பயிற்சிகளை ஆரம்பித்தார்.

அவர் கடந்த 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி முதன் முறையாக விண்வெளிக்கான பயணத்தை மேற்கொண்டார். (அ)

# சிலியில் பற்றியெரியும் காட்டுத் தீ!

## 112 பேர் உயிரிழப்பு



சன்ரியாகோ, பெப். 06

சிலியின் வினாடெல்மார் மலைப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீ காரணமாக இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 112 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் சுமார் 20 ஆயிரம் எக்டேர் வனப்பகுதியானது,இக் காட்டுத் தீயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 1,200 வீடுகள், அரிய வகை தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் தீக்கிரையாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதிகளில் தீயணைப்புப் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும், வீடுகளை இழந்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இக்காட்டுத்தீ காரணமாக இனிவரும் நாட்களில், குறித்த பகுதியில் வெப்பநிலையானது 104 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கும் என வானிலை அவதான நிலைய அதிகாரிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்காவின் டென்வரில் இரண்டு பேர் சுட்டுக்கொலை

## குடியிருப்பு பகுதியில் நடந்த சம்பவம்



நியூயோர்க், பெப். 06

அமெரிக்கா கொலராடோ மாநிலத்தின் தலைநகர் டென்வரில் நேற்று காலை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

குடியிருப்பு பகுதியான கிறீன் வலி ரேஞ்சில் நேற்று அதிகாலை 2.30 அளவில் நடந்த இந்த சம்பவத்தில் 6 பேர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் படுகாயமடைந்த இரண்டு பேர் அதிகாலை 6 மணிக்கு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் ஒரு இளைஞனும் ஒரு சிறுவனும் அடங்குவதாக பொலிஸார் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் சாட்சியங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். (அ)

உளவு குற்றச்சாட்டு:

# அவுஸ்திரேலிய எழுத்தாளருக்கு சீனா ஒத்திவைக்கப்பட்ட மரண தண்டனை

பீஜிங், பெப். 06

உளவு பார்த்த குற்றச்சாட்டில் கைதான அவுஸ்திரேலிய எழுத்தாளர் யாங் ஹெங்ஜூனுக்கு 5 ஆண்டுகளின் பின்னர் சீன நீதிமன்றம், மரண தண்டனையை ஒத்தி வைத்துள்ளது.

அவுஸ்திரேலிய அதிகாரிகளின் கூற்றுப்படி, தண்டனை இரண்டு ஆண்டுகளின் பின்னர், அவரது நன்னடத்தை அடிப்படையில் ஆயுள் தண்டனையாக மாற்றப்படலாம்.

யாங் ஹெங்ஜூன் - சீன விவகாரங்களைப் பற்றி வலைப்பதிவு செய்த ஒரு எழுத்தாளர் மற்றும் நாவலாசிரியர்.

எனினும் அவர் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்துள்ளார்.



அவரது விடுதலைக்காக மனுத்தாக்கல் செய்த அவுஸ்திரேலிய அரசாங்கம், இந்த முடிவால் அதிருப்தியடைந்துள்ளது.

# இஸ்ரேலுக்கும் உக்ரைனுக்கும் என 118 பில்லியன் டொலர் உதவி

## அமெரிக்கா வழங்குகின்றது



நியூயோர்க், பெப். 06

எல்லைப் பாதுகாப்பை அதிகரிக்கும் மற்றும் இஸ்ரேலுக்கும் உக்ரைனுக்கும் போர்க்கால உதவியை வழங்கும் வகையிலும் அமெரிக்கா 118 பில்லியன் டொலர் ஒப்பந்தம் ஒன்றினை எட்ட தீர்மானித்துள்ளது.

பல மாதங்களாக குடியேற்ற பிரச்சினை மற்றும் கியிவ் ஆதரவு தொடர்பான சர்ச்சைகளுக்குப் பின்னர் குறித்த சட்டமூலத்தை விரைவாக நிறைவேற்றுமாறு ஜனாதிபதி ஜோ பைடன் காங்கிரஸை வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைனை போர்க்கால உதவியுடன் மீண்டும் வழங்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் செனட்டில் உள்ள ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சித் தலைவர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இதேநேரம் மெக்சிகோ எல்லையில் சட்டவிரோத குடியேற்றங்களைச் சமாளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பழமைவாத குடியரசுக் கட்சி தொடந்து வலியுறுத்தி வருகின்றது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்ட சட்டமூலத்தில் உக்ரைனுக்கு 60 பில்லியன் டொலர் உதவியும் இஸ்ரேலுக்கு 14.1 பில்லியன் டொலர் இராணுவ உதவியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. (அ)

# எமது அரசியல் பயணத்தை அச்சுறுத்தி நிறுத்தமுடியாது

## கூறுகின்றார் பிரசன்ன ரணதுங்க



கொழும்பு, பெப். 06

**வீடுகளை எரிப்பதாகவும், சொத்துக்களை அழிப்பதாகவும் அச்சுறுத்தி எமது அரசியல் பயணத்தை நிறுத்த முடியாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.**

நன்றி உள்ள மனிதர்கள் கம்பஹாவில் இருக்கும் வரை ஒரு அடி கூட பின்வாங்கத் தயாரில்லை என அமைச்சர் குறிப்பிட்டார்.

மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 1200 பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் முதலமைச்சராக இருந்தபோது, பிள்ளைகளுக்குக் கல்வியுடன் அறநெறிக் கல்வியையும் கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், நாட்டின் கலாசாரத்தின்படி பெரியவர்களை நடத்தும் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும் என்பதற்காகவும் சருதம் அருணெல்லா வைத் தொடங்கினோம்.

மாகாண சபையின் பங்களிப்பின் அடிப்படையில் அந்த வேலைத்திட்டத்தின் ஊடாக அனைத்து அறநெறிப் பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள், ஆலயங்கள் என்பன வற்றிற்கு உதவினோம். அக்காலத்தில் ஒவ்வொரு குழந்தையும் அறநெறிக் கல்வி கற்க வேண்டும் என்ற சட்டத்தையும் கொண்டு வந்தோம்.

இன்று நமது பிக்குகளின் சொற்பொழிவு முடிந்ததும் அனைவரும் கைதட்டினர். பாடசாலைகளிலும் அறநெறிப் பாடசாலைகளிலும் அதைச் செய்ய குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கிறோமா? கலாச்சாரத்தை சீரழிக்க கடந்த காலத்தில் என்ன நடந்தது? மக்களின் மனநிலையைப் பற்றி சிந்திக்க இதை ஒரு உதாரணமாக எடுத்துக் கொண்டேன். ஒவ்வொரு குழந்தையையும் அறநெறிப் பாடசாலைக்கு அனுப்ப பெற்றோர்களை கேட்டுக் கொள்கிறேன்.

நாம் எமது பிள்ளைகளை சமூகத்திற்கு விடுவிப்பது நமது வீடுகளுக்கு தீ வைத்தும், கொலை செய்யும், பெற்றோர்களை அடித்து முதியோர் இல்லத்தில் விட்டு வருகின்ற ஒரு சமூகத்துக்காக இருந்தால் நாம் செய்வது சரியான வேலையா? எமக்குத் தேவை மூத்தவர்களுக்கு மரியாதை செய்கின்ற, மற்றவர்களுக்கு உதவி செய்கின்ற, சமூகத்துக்கு சுமையில்லாத முறையில் வாழ்கின்ற ஒரு கூட்டத்தை உருவாக்குகின்றதா? அப்படி இல்லாவிட்டால் அது போன்று வீடுகளுக்கு நெருப்பு வைக்கின்ற, அடிக்கின்ற, சண்டை பிடிக்கின்ற சண்டியர்கள் சிலர் பெண்களை பாலியல் வன்புணர்வு செய்கின்றவர்களை, சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்கின்றவர்களை உருவாக்குவதா? நாங்கள் அது பற்றி நல்ல முறையில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

என்னுடைய தந்தை ரெஜி ரணதுங்க அன்றிலிருந்து தொடர்ந்தும் அதிக பணத்தை செலவளித்தது அறநெறிக் கல்விக்கும் சாசனாரக்ஷக குழுமத்துக்கும் ஆகும். நாங்கள் எப்போதும் அதைச் செய்வோம். குழந்தைகளின் நல்ல பழக்கங்களை கட்டியெழுப்புவதற்காக பாடசாலைகள் மூலமாகவேனும் சில செயல்கள் நடக்க வேண்டும். நாட்டின் வீதிகள், கட்டிடங்களை செய்வதை விட குழந்தைகளுக்காக நல்ல செயல்களைச் செய்தால் அவர்கள் நாட்டுக்காக நல்ல வேலையைச் செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பு எங்கள் உள்ளத்தில் இருக்கிறது.

எங்கள் வீடுகளை எரித்தும், அடித்தும் எங்களை ஊரை விட்டு அனுப்ப முயன்றாலும் நாங்கள் அதைவிட பலசாலிகள். 77இல் என் அப்பாவுக்கும் இவைகள் நடந்தன. வீடுகளுக்கு தீ வைப்பதன் மூலம் நம்மை அரசியலில் இருந்து விலக்கி வைக்க வேண்டும் என்று யாரேனும் நினைத்தால், மக்களுக்காக உழைப்பதை நிறுத்துவோம் என்று நினைத்தால் அது நடக்காது. அப்பா காலத்தில் இருந்தே இந்த கிராமத்தில் பணிகள் நடந்துள்ளன என்றால் அதற்கு எங்கள் தலைமீடுதான் காரணம். மினுவாங்கொடையில் நன்றி உள்ள மனிதர்கள் இருக்கும் வரை நாங்கள் ஒரு அடி கூட பின்வாங்க மாட்டோம் -என்றார். (அ)

# பெலியத்தை படுகொலை; மேலும் ஒருவர் கைதானார்!

கொழும்பு, பெப். 06

பெலியத்தை பகுதியில் ஐவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் கொலைக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் மாத்தறை பிரிவு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் அதிகாரிகளால் நேற்று முன் தினம் ஹபராதுவயில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கட்டுதம்பே, ரத்கம பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி கொலை சம்பவம் தொடர்பில் இதுவரை 10 இற்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் வெளிநாடு தப்பியோடியுள்ளார். (அ)

# உடைந்து விழுந்தது பாலம் ஆற்றுக்குள் விழுந்த லொறி

கொழும்பு, பெப். 06

எம்பிலிப்பிட்டிய நகரிலிருந்து தோரகொலயாய ஊடாக மித்தெனிய செல்லும் பிரதான வீதியில் ஹலந்த ஓயா பாலம் இடிந்து வீழ்ந்ததில் குறித்த வீதியூடான போக்குவரத்துக்கு தடைப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை மரக்கட்டைகளை ஏற்றிய லொறி ஒன்று பாலத்தை கடக்கும் போதே குறித்த பாலம் இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது.

பாலம் இடிந்து விழுந்ததில் லொறி ஆற்றில் விழுந்துள்ளது. விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

பாலம் இடிந்து வீழ்ந்தமையினால் எம்பிலிபிட்டியவில் இருந்து மாத்தறை, பெலியத்த, தங்காலை நோக்கிய போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த வீதியை பயன்படுத்தும் சாரதிகள் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளனர். (அ)



# மதுவரி உரிமங்களுக்கு அறவிடும் கட்டணத்தை குறைக்க தீர்மானம்

கொழும்பு, பெப். 06

வருடாந்த மதுவரி உரிமங்களுக்கு அறவிடப்படும் கட்டணத்தை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கலால் உற்பத்தியாளர்களின் கடும் எதிர்ப்பு காரணமாகவே கட்டணம் குறைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி இரண்டு கோடியே ஐம்பது இலட்சமாக இருந்த வருடாந்த மதுபான உற்பத்தி உரிமக் கட்டணம் 20 இலட்சம் ரூபாவாக குறைக்கப்படவுள்ளது.

புதிய கட்டண திருத்தத்தின் படி, தொழில்துறையில் நுழைவதற்கு ஒருமுறை வசூலிக்கப்படும் கட்டணம் இரண்டு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் என நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தென்னங் கள் போத்தல் உற்பத்தி செய்வதற்கான வருடாந்த உரிமக் கட்டணம் 15 இலட்சமாக குறைக்கப்பட்டுள்ளது.

புதிய திருத்தத்தின் அடிப்படையில் தென்னங் கள் போத்தல் உற்பத்தி செய்வதற்கான உரிமக் கட்டணம் ஐந்து இலட்சம் ரூபா என நிதியமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இமியுனோகுளோபியுலின் தடுப்பூசியால் எயிட்ஸ் நோய் ஏற்படக்கூடிய அபாயம்?

கொழும்பு, பெப். 03

தரம் குறைந்த இமியுனோகுளோபியுலின் தடுப்பூசியை பயன்படுத்தி சிகிச்சை பெற்றுக்கொண்டவர்களுக்கு எயிட்ஸ் போன்ற நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இந்த தடுப்பூசியைப் பயன்படுத்தி சிகிச்சையைப் பெற்றுக்கொண்டவர்கள் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

தரம் குறைந்த இமியுனோகுளோபியுலின் தடுப்பூசியை இறக்குமதி செய்த விவகாரம் தொடர்பாக கடந்த 2 ஆம் திகதி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு வாக்குமூலம் வழங்க வந்திருந்த நிலையில், கைது செய்யப்பட்ட இவருக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த தடுப்பூசிகளுக்குள் ஒருவகை பக்டீரியா காணப்படுவதாக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் மேற்கொண்ட பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் இந்த தடுப்பூசி மருந்து விநியோகம் செய்யப்பட்ட தகவல்கள் மருத்துவ விநியோகப் பிரிவிடம் காணப்படுவதாகவும் விநியோகிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விசாரணை முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# விஸா இல்லாத பயணம் குறித்து இலங்கை-தாய்லாந்து பரிசீலனை

கொழும்பு, பெப். 06

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார தொடர்புகளை வலுப்படுத்தும் நோக்கில் இலங்கையும் தாய்லாந்தும் விஸா இல்லாத பயணத்தை பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தகத்தில் கையெழுத்திட்டதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

பரஸ்பர அடிப்படையில் இலவச விஸா பயண ஏற்பாட்டுக்கான உடன்படிக்கையை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்க தாம் இருவரும் ஒப்புக் கொண்டதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கத்தின் முக்கிய அங்கத்துவ நாடான சிங்கப்பூருடன் ஏற்கனவே இலங்கை தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதற்கு முன்பு இருந்தே இரு நாடுகளுக்கும் விஸா இல்லாத இலவச பயணம் இருந்தது.

உறுப்பு நாடுகளில் உள்ள பெரும்பாலான விமான நிலையங்களில் ஆசியான் கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள் விஸா இல்லாமல் பயணம் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## சாந்தனை...

ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி விரைவாக அதற்கான பணிகளை முன்னெடுப்பதற்கான உத்தரவுகளை பிறப்பிப்பதாக உறுதியளித்துள்ளார்.

அத்துடன், வெளிவிவகார அமைச்சரிடம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும் நடத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

சாந்தனை இலங்கைக்கு அழைத்துவர அனுமதிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், மனோ கணேசன் ஆகியோர் அண்மையில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த கோரிக்கையை சாதகமாக பரிசீலித்து சாந்தன் இலங்கை வந்து தன் வயதான தாயாரைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

இது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேசிய பாதுகாப்புக்கான ஜனாதிபதி ஆலோசகர் சாகல ரட்நாயக்கவுக்கு இந்த சந்திப்பின் போது ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்.

என்றாலும், அதற்கான நடவடிக்கைகள் எதுவும் விரைவுபடுத்தப்படவில்லை. இவ்வாறான பின்புலத்திலேயே நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

சுதந்திர ராஜா என்ற இயற்பெயர் கொண்ட சாந்தன், கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

எனினும், இவர் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர் என்பதால், அவருடைய சொந்த நாட்டில் இருந்து ஒப்புதல் கிடைத்த பின் அனுப்புவதற்கான நடைமுறைகள் செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சாந்தனுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளது. சாந்தனுக்கு இரண்டு கால்களிலும் வீக்கம் ஏற்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## மக்களுக்கான...

உயர் அதிகாரிகள், மாகாண அமைச்சின் அதிகாரிகள், கல்வித்துறைசார் உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துக்கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி தொடர்பிலேயே கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

அந்தவகையில், கடந்த ஐந்து வருடங்களில் யாழ்.மாவட்ட மாணவர்கள், தரம் ஐந்து, சாதாரண மற்றும் உயர் தரங்களில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளின் அடிப்படையில், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்.மாவட்டத்தில் சிறந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

எனினும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களின் கல்வி நிலை தொடர்பில் அதிக கரிசனை செலுத்த வேண்டியுள்ளதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், வடக்கு மாகாணத்தில் கல்வித்துறையில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன விடயங்களை தெளிவுப்படுத்தினார்.

அதிபர்கள் நியமனத்தில் எழுந்த சிக்கல்கள், ஆசிரியர் இடமாற்றங்களில் காணப்படும் சிக்கல்கள், தளபாட வசதிகள் இன்மை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது அவர் தெளிவுபடுத்தினார்.

அரச சேவையில் இணைந்துகொள்ளும் அனைவரும் பொதுமக்களுக்காக செயற்பட வேண்டும் என இதன்போது வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறும் அரச உத்தியோகஸ்தர்கள், மக்களுக்காகவே சேவையாற்ற கடமைப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் மாகாணத்தில் ஆசிரியர், அதிபர்களின் வெற்றிடங்கள் காணப்படும் பகுதிகளுக்கு சென்று சேவை செய்ய வேண்டும் எனவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். (அ)

## தொடர்...

அடுத்து முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். (அ)

## இந்திய...

குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

1980 களின் பிற்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணி இலங்கை - இந்திய ஒப்பந்தம் மற்றும் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்ட வரலாறுகளையும் இந்திய ஊடகங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இருப்பினும், இந்தியா மீதான நிலைப்பாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் குறிப்பிடத்தக்க மாற்றத்தின் பின்னர் அதாவது சுமார் நன்கு தசாப்தங்களை கடந்து இந்த அழைப்பு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருக்கு இந்திய அரசாங்கத்திடம் இருந்து உத்தியோகபூர்வ அழைப்பு வருவது இதுவே முதன் முறையாகும்.

இந்த நிலையில், அநுரகுமார திஸநாயக்க உள்ளிட்ட குழுவினர் புதுடில்லி, அகமதாபாத் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய மூன்று நகரங்களுக்குச் செல்ல உள்ளதாக இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், விவசாயம் மற்றும் தொழில் துறையில் சிறந்து விளங்கும் பகுதிகளை பார்வையிடுவதுடன், அரச அதிகாரிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினரை சந்திக்க வுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (அ)

## ‘கெஹலிய...

உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் மருந்துகளை இறக்குமதி செய்துள்ளதுடன் நாட்டின் அப்பாவி மக்களிற்கு அவற்றை வழங்கியுள்ளார் என ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எத்தனை பேர் இதன்காரணமாக உயிரிழந்தனர் என்பது எங்களிற்கு தெரியாது ஆகவே இந்த விவகாரம் குறித்து நாங்கள் மேலும் ஆராய வேண்டும் இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லரின் படுகொலைகள் போன்றது இது என கருதவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஹிட்லரும் விசஊசியை செலுத்தி மக்களை கொன்றார் எனவும் அவர் தெரிவித்தார். கெஹலியவிற்கு வழங்கப்படும் தண்டனை இலங்கையில் அரசியல்வாதி ஒருவருக்கு வழங்கப்பட்டமை மிகச்சிறந்த தண்டனையாக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாது நோய் அறிகுறிகளை பரிசோதிப்பதற்காக தடுப்புமருந்துகளை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிற்கும் செலுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுவாக அரசியல்வாதிகள் மோசடி ஊழலில் ஈடுபடுவது குறித்து வெட்கப்படுவதில்லை சிறைக்கு சென்ற பின்னரே அவர்கள் நோய்அறிகுறிகளை வெளிப்படுத்துவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை பல்கலைக்கழகங்களாக மாற்றப்படும்

### சஜித் பிரேமதாஸ உறுதி



கொழும்பு, பெப். 06

“அலரிமாளிகை, ஜனாதிபதி மாளிகை என்பன ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பல்கலைக்கழகங்களாக மாற்றப்படும்.” - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று அறிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“ஏனைய கட்சித் தலைவர்கள் 2024 இல் கூட மக்களை ஏமாற்றி, மாளிகை அரசியலில் ஈடுபட்டு - அரச மாளிகைகளில் சொகுசுகளை அனுபவிக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில், நாட்டின் மாளிகைகள் நவீன தொழில் நுட்பம், ஆங்கிலம் என்பன கற்பிக்கும் பெரிய பல்கலைக்கழகங்களாக மாற்றப்படும். எனவே, மாளிகைகள் பற்றிய கனவுகளை வைத்துக் கொள்ளா தீர்கள்.

மொழியை மையமாக வைத்து அரசியல் நடத்தும் காலத்தை நிறுத்த வேண்டும். நாட்டிலுள்ள 41 இலட்சம் பாடசாலை மாணவர்களுக்கு உயர் ஆங்கில மொழிக் கல்வியை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இனம், மதம், சாதி, குல பேதங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி அரசியல் கோஷங்களுக்கு பணயக் கைதிகளாக இருக்க வேண்டாம்.” - என்றார். (அ)

# 2,535 உதவி ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு அனுமதி!

கொழும்பு, பெப். 06

”மலையக பெருந்தோட்ட பாடசாலைகளுக்காக ஆசிரியர் உதவியாளர்களாக 2 ஆயிரத்து 535 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.” - என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

“863 பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான ஆசிரியர் உதவியாளர்கள் நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதன்படி 2,535 பேர் நியமிக்கப்படவுள்ளனர். மாதம் 20 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இவர்கள் தம்மை பட்டதாரியாக தரமுயர்த்திக் கொள்ள வேண்டும், அவ்வாறு இல்லாவிட்டால் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பயிற்சியை நிறைவுசெய்திருக்க வேண்டும். அதன்பின்னர் நியமனம் வழங்கப்படும்.

இதன்மூலம் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.” - எனவும் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் வர்த்தக நிலையத்துக்குள் புகுந்த கார்

கிளிநொச்சி, பெப். 06

கிளிநொச்சி, விசுவமடு பகுதியில் வேக கட்டுப்பாட்டை இழந்த காரொன்று, வர்த்தக நிலையத்துக்குள் புகுந்துள்ளது.

வர்த்தக நிலையத்தின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்க வண்டி, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டியென்பன சேதமடைந்தன.

பரந்தன்- புதுக்குடியிருப்பு வீதியில் விசுவமடு பகுதியில் நேற்று மாலை 5.40 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்தது.

புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கி பயணித்த கார், மோட்டார் சைக்கிள் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது, வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியோரமிருந்த வர்த்தக நிலையத்துக்குள் புகுந்தது.

வர்த்தக நிலையத்துக்கு வந்த வாடிக்கையாளர்களின் வாகனங்கள், வர்த்தக நிலையத்தின் முன்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றை மோதித்தள்ளியபடி கார் வர்த்தக நிலையத்துக்குள் புகுந்தது.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள், ஒரு துவிச்சக்கரவண்டி மற்றும் முச்சக்கர வண்டி என்பன சேதமடைந்தன.

காரின் கீழ்ப்பகுதியில் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டி என்பன மீட்டுள்ளன.

விபத்து தொடர்பாக தர்மபுரம் போலீசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## பொருட்களின்...

செய்யப்பட்ட உளுந்து, இறக்குமதி செய்யப்பட்ட வெங்காயம், இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மற்றும் மைசூர் பருப்பு ஆகியவற்றின் அதிகபட்ச மொத்த மற்றும் சில்லறை விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

குறைக்கப்பட்டுள்ள பொருட்களின் மொத்த விலை பட்டியல் பின்வருமாறு:-

செத்தல் மிளகாய் கிலோ ரூ.870, வெள்ளை சீனி கிலோ ரூ.265, இறக்குமதி செய்யப்படும் உளுந்து கிலோ ரூ.900, பெரிய வெங்காயம் கிலோ ரூ.320, உருளைக்கிழங்கு கிலோ ரூ.120, பருப்பு கிலோ ரூ.295 (அ)

## வட்டு. பொலிஸா...

தன்னை தாக்கியதாகவும், பின்னர் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று சிறிய அறைக்குள் வைத்து தாக்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சில மாதங்களின் முன்னர் சித்தங்கேணியை சேர்ந்த இளைஞன் ஒருவரை அடித்து கொன்ற குற்றச்சாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பொலிஸார் சிலர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu

## முட்டை ஒன்றின் விலை 58!



கொழும்பு, பெப். 06

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் முட்டை ஒன்றின் விலை 40 ரூபாவாக குறைக்கப்பட்ட போதிலும் மீண் டும் ஒரு முட்டையின் விலை 58 ரூபாவாக உயர் வடைந்துள்ளது.

தாம் ஒரு முட்டையை மொத்த விலையில் 60 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதாக பேக்கரி உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

கோழிப்பண்ணை உரிமையாளர்களே இவ்வாறு முட்டை விலையை உயர்த்தியதாக முட்டை வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இடைத்தரகர்கள் குழுவொன்றே முட்டையின் விலையை அதிகரித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வேகமாக அதிகரித்து வரும் முட்டை விலையைக் கட்டுப்படுத்த எதிர்காலத்தில் சில நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். (அ)

# கெஹலியவின் அமைச்சுப் பதவியை பறிப்பதற்கு அரசாங்கம் தீர்மானமா?

### கசிந்தது உயர்மட்டத் தகவல்

கொழும்பு, பெப். 06

**அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை அமைச்சரவையில் இருந்து நீக்குவது தொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்டம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.**

முன்னாள் சுகாதார அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல தற்போது சுற்றாடல் அமைச்சராக பதவி வகிக்கின்றார்.

சுகாதார அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் தரமற்ற மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் கடந்த 2ஆம் திகதி கெஹலியவைக் கைது செய்திருந்தது.

அதன் பின் கடந்த மூன்றாம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட கெஹலிய ரம்புக்வெலவை, எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் மோசடிச் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் உள்ள ஒருவரை தொடர்ந்தும் அமைச்சரவையில் வைத்திருப்பதன் மூலம் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படக்கூடும் என்று பல்வேறு தரப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதனையடுத்து, அமைச்சர் பதவியில் இருந்து கெஹலிய ரம்புக்வெலவை நீக்குவது தொடர்பில் அரசாங்கத்தின் உயர்மட்டம் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

உயர்மட்ட அரசாங்க வட்டாரங்கள் மூலம் இத்தகவல் கசிந்துள்ளது.

இதேவேளை, அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ரம்புக்வெலவை அமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர் சங்கங்களின் கூட்டமைப்பும் கோரியுள்ளது.

# கெஹலியவை பதவியிலிருந்து நீக்கக் கோரி கையெழுத்து சேகரிக்கும் வேட்டை ஆரம்பம்!

கொழும்பு, பெப். 06

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவை சுற்றாடல் அமைச்சர் பதவியில் இருந்து நீக்குமாறு கோரும் மனுவில் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாடு கோட்டை - தொடருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், சுற்றாடல் அமைச்சர் பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கு அவருக்கு தார்மீக உரிமை இல்லை என தெரிவித்து சில சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பொது மனுவில் கையெழுத்து சேகரிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர்.

இந்தநிகழ்வில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

கொலை குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 02.12.1944 மறைவு 05.02.2024

### திருமதி பத்மராணி சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - திரு/ சென் ஜோசப் கல்லூரி, திரு/ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, யா/ நல்லூர் CCTMS, மு/ மல்லாவி மத்திய கல்லூரி, மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, திரு/ மெதடிஸ்த பெண்கள் கல்லூரி)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் 902A, பருத்தித்துறை வீதி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மராணி சுப்பிரமணியம் நேற்று (05.02.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கம் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் கனகாம்பிகையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபா. சுப்பிரமணியம் (ஓய்வு நிலை மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வடக்கு கிழக்கு மாகாணம்) அன்பு மனைவியும், சுபத்திரா (நிறைவேற்று அதிகாரி JAFFNA AIR SERVICES (PVT) LTD) , சுமந்திரா (ஆசிரியர் யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி, ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசீகரன் (மக்கள் தொடர்பு அலுவலகர், ஆளுனர் செயலகம், வட மாகாணம்) துஷியந்தன் (ஆசிரிய ஆலோசகர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், புருஷோத், சஞ்சனா, தினுாசன், கவிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம் (துறைமுக மேற்பார்வையாளர் - கொழும்பு) சிவரட்ணம் (ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் - தென்மாகாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விக்னேஸ்வரி மற்றும் சந்திரா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (06.02.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக செம்மணி இந்து மயானத்திந்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

902A பருத்தித்துறை வீதி,
நல்லூர் யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்

# உயர்தரப் பாடசாலைகள் டிஜிற்றல் மயமாக்கப்படும்

### யாழில் கல்வி அமைச்சர் கருத்து

யாழ்ப்பாணம், பெப். 06

நாட்டிலுள்ள உயர்தரப் பாடசாலைகள் டிஜிற்றல் மயமாக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

யாழ் இந்துக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டிலுள்ள சகல சிறார்களுக்கும் கல்வியில் சம வாய்ப்புகளை வழங்குவதே கல்வி அமைச்சின் நோக்கமாகும்.

அதன் ஒரு நடவடிக்கையாக எதிர்வரும் மாதத்திற்குள் நாட்டிலுள்ள உயர்தரப் பாடசாலைகள் டிஜிற்றல் மயமாக்கப்படும்.

ஜூன் மாதம், அதற்கேற்ப, புதிய தொழில்நுட்பத்துடன் நேரடியாக இணைப்பதன் மூலம் பிள்ளைகள் கல்வியைத் தொடர வாய்ப்பு வழங்கப்படும்.

இதனடிப்படையில், இலங்கையில் உள்ள 3,000 உயர்தரப் பாடசாலைகள் டிஜிற்றல் மயமாக்கப்படவுள்ளதுடன், இது தொடர்பான ஆசிரியர்களுக்கான பயிற்சி எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை, ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் நிறுவப்பட்டுள்ள கணினி வள நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)




# ஜனாதிபதி ரணிலுடன் எமக்கு எந்தத் தொடர்புகளும் இல்லை

### சு.கவின் பதில் பொதுச் செயலாளர்



கொழும்பு, பெப். 06

சுதந்திரக் கட்சிக்கும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பொது ஜன பெரமுனவுக்கும் இடையில் எவ்வித அரசியல் கொடுக்கல், வாங்கல்களும் இல்லை என அந்த கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபால தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனோ அல்லது பொதுஜன பெரமுனவுடனோ அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தை நடத்தும் தேவை சுதந்திரக்கட்சிக்கு இல்லை.

சுதந்திரக் கட்சி தலைமையிலான கூடடணி குறித்து தற்போது பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதால்,அது சம்பந்தமாக பொய்யான கதைகளை சமூகமயப்படுத்த சிலர் முயற்சித்து வருகின்றனர்.

சுதந்திரக் கட்சியின் தலைமையில் உருவாக்கப்படும் அரசியல் கூட்டணியானது நாட்டின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானகரமான ஒன்றாக இருக்கும். இதனால், ஆரம்பிக்கப்பட உள்ள கூட்டணி தொடர்பில் சிலர் பொய்யான கதைகளை பரப்பி வருகின்றனர்.

சுதந்திரக் கட்சியின் தலைமையில் உருவாகும் கூட்டணி வலுவான கூட்டணியாக இருக்கும் என்பதை பஸில் அணியை சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிந்துள்ளனர்.

இதனால், பொதுஜன பெரமுன மற்றும் அதன் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுடன் சுதந்திரக்கட்சி எந்த வித தொடர்புகளும் இல்லை-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# இந்திய நாடாளுமன்ற தேர்தல்: அதிமுக கூட்டணிக்கு வரும் என பாஜக காத்திருக்கிறதா?

சுபாஷ் சந்திர போஸ்

தமிழ்நாடு அரசியல் கட்சிகள், 2024 நாடாளுமன்றத் தேர்தலை நோக்கிப் பரபரப்பாக இயங்கத் தொடங்கியுள்ளன. ஆளும் கட்சியான திமுக, எதிர்க் கட்சியான அதிமுக உள்ளிட்ட கட்சிகள் தொகுதிப் பங்கீடு, அறிக்கை தயாரிப்பு, தேர்தல் பணிகள் ஒருங்கிணைப்பு உள்ளிட்ட குழுக்களை அமைத்து பணியாற்றத் தொடங்கியுள்ளன.

திமுக கூட்டணி இந்த முறை 40க்கு 40 என்ற இலக்கோடு களமிறங்கியுள்ளது. திமுக மீதான எதிர்ப்பலையை வாக்குகளாக மாற்றி வெற்றி பெறுவோம் என நம்பிக்கையோடு இருக்கிறது அதிமுக.

இதர கட்சிகளான காங்கிரஸ், பாஜக, பாமக, விடுதலை சிறுத்தைகள், இடதுசாரி கட்சிகள் உள்ளிட்ட கட்சிகளும் வருகின்ற தேர்தலை நோக்கி வேகமாக இயங்கத் தொடங்கியுள்ளன. அதேநேரம் நடிகர் விஜய் புதிய கட்சியைத் தொடங்கியுள்ளதும் முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் திமுக கூட்டணியில் யாருக்கு எத்தனை இடங்கள், அதிமுக கூட்டணியில் யார் இடம்பெறப் போகிறார்கள், பாஜகவின் நகர்வுகள் என்ன, இதர மாநில கட்சிகளின் பாத்திரம் என்ன போன்ற கேள்விகள் அரசியல் களத்தை ஆக்கிரமித்துள்ளது.



### திமுக கூட்டணி

தமிழ்நாட்டில் தற்போது ஆளும்கட்சியாக இருந்து வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் கடந்த சட்டமன்றத்தில் போட்டியிட்ட அதே கூட்டணி களம் இறங்குகிறது. இதில் இந்திய ஜனநாயகக் கட்சி மட்டும் ஏற்கெனவே பாஜகவில் இணைந்துவிட்டது. மற்றபடி மீண்டும் அதே கூட்டணியே தொடர்வதாகக் கூறியுள்ளார் தமிழன் பிரசன்னா.

இந்நிலையில் கூட்டணிக் கட்சிகளுக்கு கடந்த முறையைவிட குறைந்த இடங்களே வழங்கப்படும் என்று திமுக சார்ந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதிலும் குறிப்பாக, இந்த முறை கண்டிப்பாக திமுக 25 இடங்களில் போட்டியிட உள்ளதாகவும், மற்ற கூட்டணிக் கட்சிகளுக்கு 15 இடங்களை ஒதுக்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. தொகுதிப் பங்கீடு செய்வதற்காக திமுகவின் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு முதல்கட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.






இதுகுறித்து பேசிய திமுக செய்தித் தொடர்பாளர் தமிழன் பிரசன்னா, ‘தொகுதி பங்கீட்டுக்கான குழு பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது. இதைத் தாண்டி யாருக்கு எவ்வளவு தொகுதிகள், எந்த இடங்கள் வழங்க வேண்டும் என்பதைக் கூட்டணியின் தலைவர் முதல்வர் முக.ஸ்டாலின் வெளிநாட்டில் இருந்து வந்ததற்குப் பிறகு முடிவு செய்வார்,” என்று தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணி குறித்துப் பேசிய அவர், “தேர்தல் அறிக்கைப் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்ட அளவிலான பணிகள் சிறப்புக் கூட்டங்கள் முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி தலைமையில் நடந்து வருவதாக” கூறியுள்ளார்.

### முதல் கட்ட பேச்சுவார்த்தை

முதல் கட்டமாக காங்கிரஸ் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியோருடன் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளது திமுக. இந்தப் பேச்சுவார்த்தையில் கடந்த தேர்தலைவிட அதிக இடங்களில் போட்டியிட காங்கிரஸ் பட்டியல் அளித்ததாகவும், ஆனால் இந்த முறை 5 முதல் 7 இடங்களே காங்கிரசுக்கு ஒதுக்க திமுக திட்டமிட்டுள்ளதாகவும் அரசியல் களத்தில் தகவல்கள் பரவி வருகிறது.






ஆனால் இதுகுறித்துப் பேசிய காங்கிரஸ் சட்டமன்றக் குழு தலைவர் செல்வப்பெருந்தகை, “திமுகவுடனான முதல் கட்ட பேச்சுவார்த்தையில் காங்கிரசின் அகில இந்திய தலைவர்களில் ஒருவரான முகுல் வாஸ்னிக் தலைமையில் பங்கேற்றோம். எந்தெந்த தொகுதி, எத்தனை தொகுதியில் போட்டியிடுகிறோம் என்று பின்னால் முடிவு செய்து கொள்ளலாம் என்று பேசிவிட்டு மகிழ்ச்சியோடு விடைபெற்றுள்ளோம்,” என்று தெரிவித்துள்ளார்.

இதற்குப் பின் பிப்ரவரி 9ஆம் தேதிக்கு மேல் மீண்டும் பேச்சுவார்த்தை நடக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த முறை 9:1 என்ற அடிப்படையில் போட்டியிட்ட காங்கிரசுக்கு இந்த முறை தொகுதிகளின் எண்ணிக்கை குறையுமா என்று கேட்டபோது, “இல்லை திமுக - காங்கிரஸ் கூட்டணி வலுவானது. கேட்பதற்கு எங்களுக்கும் உரிமை உள்ளது. கொடுப்பதற்கு அவர்களுக்கும் தாராளமான மனது உள்ளது. எத்தனை இடம் என்பதை உயர்மட்டக் குழு தீர்மானித்து, பேச்சுவார்த்தையின் இறுதியில் அறிவிக்கும்,” என்று பதிலளித்தார்.

### இடதுசாரிகளின் நிலை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சனியன்று திமுகவுடன் முதல்கட்ட பேச்சுவார்த்தையை நடத்தி முடித்துள்ளது. இந்த முறை முன்பைவிட அதிகமான இடங்களைக் கேட்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பேச்சுவார்த்தைக்குப் போன 10 நிமிடங்களிலேயே வெளியே வந்துவிட்டனர்.



இதுகுறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் முத்தரசனிடம் கேட்டபோது, “பேச்சுவார்த்தை சுமூகமாக முடிவடைந்துள்ளது. எங்களது விருப்பத்தைத் தெரிவித்து வந்துள்ளோம். அடுத்தகட்ட பேச்சுவார்த்தை தொடரும். மற்ற விஷயங்கள் பின்னர் அறிவிக்கப்படும்,” என்று பதிலளித்துள்ளார்.

### திமுகவின் மற்ற கூட்டணிக் கட்சிகள்

திமுக கட்சியில் அங்கம் வகிக்கும் மற்றுமொரு முக்கிய கூட்டணி கட்சியான விடுதலை சிறுத்தைகள் கட்சி கடந்த தேர்தலில் போட்டியிட்ட இரண்டு தொகுதிகளில் ஒன்றில் திமுக சின்னத்திலும், மற்றொன்றில் பானை சின்னத்திலும் போட்டியிட்டது.

இந்நிலையில் இந்த முறை கூடுதல் இடங்ளையும், அனைத்து இடங்களிலும் பானை சின்னத்தில் போட்டியிட கேட்கப் போவதாகவும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.



இதுகுறித்து விசிகவின் தலைவர்களில் ஒருவரான வன்னியரசுவிடம் கேட்டபோது, “தற்போதைக்கு எந்தத் தகவல்களும் கூற இயலாது. கட்சித் தலைமை முடிவெடுத்து பேச்சுவார்த்தை நடந்த பின்னரே இன்னும் 10 நாட்களில் அறிவிப்பு வெளியிடப்படும்,” என்று தெரிவித்தார்.

(16ம் பக்கம் பார்க்க)

தீபக் மண்டல்

# இலங்கைக்கு கூடுதல் நிதி, மாலைதீவுக்கு 22 வீத நிதி குறைப்பு: இந்தியாவின் முடிவு எதை காட்டுகிறது?



பிப்ரவரி 1ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட மோடி அரசின் இடைக்கால பட்ஜெட்டில், மாலத்தீவுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவிகள் குறைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மாலத்தீவிற்காக இந்திய அரங்காங்கம் 400 கோடி ரூபாயை ஒதுக்கியிருந்தது. பின்னர், இந்த உதவியானது 770 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டது.

ஆனால், இந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட்டில் இந்த உதவி ரூ.600 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது மாலத்தீவுக்கு இந்தியா வழங்கிய வளர்ச்சி உதவித் தொகை 22 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

மாலத்தீவில் உள் கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்தியா உதவி வருகிறது. ஆனால் தற்போதைய அதிபர் முகமது முய்சு ஆட்சிக்கு வந்தவுடன், இந்தியாவுடனான மாலத்தீவுகளின் உறவு மோசமடைந்தது.

அதிபர் முய்சுவின் கட்சி சீனாவின் பக்கம் சாய்ந்துள்ளதாக நம்பப்படுகிறது. குடியரசுத் தலைவர் தேர்தல் பிரசாரத்தின் போது, அவரது கட்சி 'இந்தியாவே வெளியேறு' என்ற கோஷத்தை முன்வைத்து பிரசாரம் செய்தது.

இதற்குப் பிறகு, பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணத்தாலும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்ச்சைகளாலும் இந்தியா-மாலத்தீவு இடையேயான உறவில் பதற்றம் அதிகரித்தது. இந்த பதற்றத்திற்கு மத்தியில், முய்சு சீனாவிற்கு சென்றார்.

அங்கிருந்து திரும்பியதும், தனது நாடு சிறியது, ஆனால் அதை தங்கள் வசதிக்காக பயன்படுத்த யாருக்கும் உரிமை இல்லை என்று கூறியிருந்தார். அவரது இந்த பேச்சு, இந்தியாவை நோக்கி இருந்ததாகக் கருதப்பட்டது.

மாலத்தீவில் இந்திய ராணுவம் இருப்பது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே ஏற்கனவே பிரச்னை இருந்து வருகிறது. முய்சு ஆட்சிக்கு வந்தவுடன், இந்தியப் படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்பதே அவரது முதல் உத்தரவு.

மார்ச் 15ம் தேதிக்குள் இந்திய வீரர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கூறியிருந்தார், முய்சு. இந்த விவகாரம் குறித்து இந்தியாவுடன் விவாதிக்க மாலத்தீவுகள் இரண்டாவது முக்கிய குழு கூட்டத்தையும் நடத்த உள்ளது.



தற்போது 77 இந்திய வீரர்கள் மாலத்தீவில் உள்ளனர். இந்திய ராணுவத்தின் இரண்டு ஹெலிகாப்டர்கள் மற்றும் ஒரு விமானம் அங்கு உள்ளன. அவை மாலத்தீவில் இயற்கை பேரழிவுகளின் போது மக்களுக்கு உதவ பல முறை பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் மாலத்தீவின் முய்சு அரசோ, அவை அந்நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கருதுகிறது.

### என்ன பிரச்னை?

மாலத்தீவுக்கு அளிக்கப்பட்ட ரூ.600 கோடி, இந்தியா எந்த நாட்டிற்கும் வழங்கிய மூன்றாவது பெரிய உதவியாகும்.

இந்திய மற்ற நாடுகளுக்கு வழங்கிய நிதி உதவிகளிலேயே மாலத்தீவுக்கு அளிக்கும் ரூ 600 கோடி நாட்டின் மூன்றாவது பெரிய உதவித்தொகையாகும். நடப்பு நிதியாண்டான, 2023-24 இல், மாலத்தீவுக்கு இந்தியா ரூ 770 கோடி வழங்க நிதி ஒதுக்கியிருந்தது இந்தியா.

இது, முந்தைய நிதியாண்டான, 2022-23 இல் வழங்கப்பட்ட ரூ 183.16 கோடி நிதியைவிட சுமார் 300 சதவீதம் அதிகமாகும். ஆனால், வரும் நிதியாண்டிற்கான இடைக்கால பட்ஜெட்டில், மாலத்தீவுக்கான உதவியைக் இந்தியா குறைத்துள்ளது. அதேசமயம் இலங்கை, மொரீஷியஸ், சீஷெல்ஸ், ஆப்பிரிக்க ஆகிய நாடுகளுக்கான நிதி உதவிகளை அதிகப்படுத்தியுள்ளது.

உலக விவகாரங்களுக்கான இந்திய கவுன்சிலின் மூத்த ஆராய்ச்சியாளர் முனைவர் ஃபஸூர் ரஹ்மான் சித்திக் கூறுகையில், "முய்சு அரசு இந்தியாவை எதிர்த்த விதம் இந்தியாவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இது போன்ற கடுமையான அணுகுமுறையை இந்தியா எதிர்பார்க்கவில்லை. முய்சு இந்தியாவுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். அவர், அதிபரானதும், துருக்கி மற்றும் சீனாவுக்குச் சென்று இந்தியாவுக்கு எதிரான உணர்வுகளை மேலும் தூண்டினார்"

"முய்சு நாட்டிற்குள் இருக்கும் தனது ஆதரவாளர்களை மகிழ்விப்பதற்காக மட்டுமே இதைச் செய்து கொண்டிருந்தார். அதனால் இந்தியா எதிர்வினையாற்றுவது இயற்கையானது. உதவியை குறைப்பதன் மூலம் இந்தியா இதைச் சுட்டிக்காட்டியுள்ளது,"என்றார் அவர்.



மாலத்தீவில் இந்திய எதிர்ப்பு உணர்வுகள் எந்த அளவிற்கு அதிகரித்துள்ளன என்பதை இந்த ஆண்டின் தொடக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் சிறிய தீவுக்கூட்டமான லட்சத்தீவுகளின் படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்ததில் இருந்து தெரியும்.

இதைத் தொடர்ந்து, சில இந்தியர்கள் லட்சத்தீவுகளின் படங்களைப் பகிர்ந்து கொண்டனர். அதேபோல, சுற்றுலாப் பயணிகளை மாலத்தீவுக்குப் பதிலாக இங்கு பயணிக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் இதற்கு பதிலடியாக மாலத்தீவைச் சேர்ந்த சிலர் பிரதமர் மோடிக்கு எதிரான கருத்துகளைக் கூறி லட்சத்தீவு ஒரு மோசமான இடம் என வர்ணித்துள்ளனர்.

மாலத்தீவு அரசாங்கத்தின் மூன்று இணை அமைச்சர்களும் இப்படியான விமர்சனத்தை செய்துள்ளனர். அவர்கள் அந்தப்பதிவுகளை பின்னர் நீக்கினர். ஆனால் முய்சு கட்சியின் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரம் அங்கு பரந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை இந்தச் சம்பவம் தெளிவுபடுத்தியுள்ளது.

### இந்திய எதிர்ப்பால் மாலத்தீவுக்கு என்ன ஆபத்து?

முய்சு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், அங்கிருந்த இந்தியப் படைகளை வாபஸ் பெறுமாறு இந்தியாவிடம் கேட்டுக் கொண்டது.

இதைத் தொடர்ந்து, இந்தப் பிரச்னையை அமைதியான முறையில் தீர்க்க இந்தியா மற்றும் மாலத்தீவுகளுக்கு இடையே ஒரு முக்கிய குழு கூட்டம் நடைபெற்றது. இரண்டாவது கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. கோர் குரூப் கூட்டத்தின் மூலம் இந்தியா என்ன செய்தியை அனுப்ப விரும்புகிறது?

புதுதில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக சீன ஆய்வு மையத்தின் இணைப் பேராசிரியர் அரவிந்த் யெலேரி கூறுகையில், "இந்திய அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இந்தியாவுடனான உறவில் பாதகமான நடவடிக்கைகளை மாலத்தீவு எடுத்ததாக இந்தியா குறிப்பிட விரும்பவில்லை. மோடி அரசு கொஞ்சம் பொறுத்திருந்துதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனால், இடைக்கால பட்ஜெட்டில் மாலத்தீவுக்கான உதவி குறைக்கப்பட்டிருக்கலாம், ஆனால் முழு பட்ஜெட்டில் அதிகரிக்கலாம். அதுவரை உறவுகளில் சில முன்னேற்றம் ஏற்பட்டால், உதவியை அதிகரிக்கலாம்." என்றார் அவர்.

"தற்போது இந்தியா, தனது நட்பு நாடுகளான இலங்கை, சீஷெல்ஸ், மொரீஷியஸ் போன்ற நாடுகளுக்கு தனது உதவியை அதிகப்படுத்தியுள்ளதால், மாலத்தீவுகள் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளக் கூடும்" என்றும் அரவிந்த் யெலேரி கூறினார்.




### இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு என்ன?

சீனா சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பிய பிறகு, முய்சுவின் அணுகுமுறை இந்தியாவிடம் மென்மையாகத் தெரியவில்லை. சிறிய நாடு என்பதால் மாலத்தீவை கொடுமைப்படுத்த எந்த நாட்டுக்கும் உரிமை இல்லை என்று கூறியிருந்தார்.

இதுகுறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறுகையில், 'இந்தியாவின் அண்டை நாடுகளில் சீனா செல்வாக்கு செலுத்தும், ஆனால் இது போன்ற போட்டி அரசியலுக்கு இந்தியா பயப்பட வேண்டாம். அனைத்து அண்டை நாடுகளுக்கும் இடையே பிரச்னைகள் உள்ளன, ஆனால் இறுதியில் அண்டை நாடுகளுக்கு மற்ற அண்டை நாடுகள் தேவை" என்று கூறியிருந்தார்.

ஜெய்சங்கர் கூறுகையில், சீனாவின் செல்வாக்கு தொடர்பாக போட்டி அதிகரித்துள்ளது, ஆனால் அதை இந்திய ராஜ தந்திரத்தின் தோல்வி என்று கூறுவது தவறு.

"சீனாவும் நமது அண்டை நாடு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சீனாவைப் பற்றி நாம் பயப்பட வேண்டாம் என்று நான் நினைக்கிறேன். உலகளாவிய அரசியல் ஒரு போட்டி விளையாட்டு. நீங்கள் உங்களால் முடிந்ததை முயற்சி செய்யுங்கள், நாங்கள் எங்களால் முடிந்ததை முயற்சிப்போம். இன்றைய கால கட்டத்தில் போட்டியைக் கண்டு பயப்பட வேண்டாம். அதை வரவேற்று போட்டியிடும் திறன் நம்மிடம் உள்ளது," என்றார் ஜெய்சங்கர்.

### சீன சார்பு நிலையை கைவிடுவாரா முய்சு?

மாலத்தீவின் எதிர்க்கட்சியான ஜம்ஹூரி கட்சித் தலைவர் காசிம் இப்ராகிம், இந்தியா மற்றும் பிரதமர் மோடியிடம் முறைப்படி மன்னிப்பு கேட்குமாறு அதிபர் முகமது முய்சுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்த இராஜ தந்திர நல்லிணக்கத்தை நாடுமாறு முய்சுவிடம் இப்ராஹிம் வேண்டுகோள் விடுத்தார்.

இப்ராஹிமின் அறிக்கை, இந்தியாவை குறிவைத்த முய்சுவின் எதிர்வினையுடன் தொடர்புடையது.

முகமது முய்சுவுக்கு அந்நாட்டு நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு கிளம்பிய போது, இந்திய பிரதமர் மோடியிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து இப்ராஹிம் கூறுகையில், "முன்னாள் அதிபர் அப்துல்லா யாமீன் இந்தியா வெளியேற வேண்டும் என்ற பிரசாரத்தை தொடங்கினார், இதன் காரணமாக இந்தியா மற்றும் மாலத்தீவுகளுக்கு இடையே பதற்றம் அதிகரித்தது,"என்றார்.

சீனாவிலிருந்து திரும்பிய பிறகு, மருந்து விஷயத்தில் இந்தியாவைச் சார்ந்திருப்பதைக் குறைப்பது பற்றி முய்சு பேசினார்.

மாலத்தீவுக்கு இந்தியா மருந்துகளை வழங்கி வருகிறது. மாலத்தீவுக்கு கொரோனா தொற்று பரவிய காலத்தில் இந்தியா தடுப்பூசிகளை வழங்கியது.

# இந்திய நாடாளுமன்ற தேர்தல்:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இதர கூட்டணிக் கட்சிகளான மதிமுக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி உள்ளிட்ட கட்சிகள் ஏற்கெனவே தங்களுக்கு வழங்கப்பட்ட தொகுதிகளையே எதிர்பார்ப்பதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

குறிப்பாக, மதிமுக தலைவர் வைகோ, “நான் திமுகவை நிர்பந்திக்கும் சூழலை உருவாக்க மாட்டேன்” என்று கூறியுள்ளார். இது இல்லாமல், மக்கள் நீதி மையம் கமல்ஹாசனும் திமுக கூட்டணிக்குள் வந்தால் அவருக்கும் ஒரு தொகுதி ஒதுக்கப்படலாம் என்று பேச்சுவார்த்தை ஓடிக் கொண்டிருக்கிறது.

**அதிமுக கூட்டணியின் நிலை என்ன?**

ஆளும் கட்சியைவிட எதிர்க்கட்சியான அதிமுக பொறுமையாகவே தேர்தல் பணிகளைக் கையாண்டு வருகிறது. இதுகுறித்து முன்னாள் அமைச்சரும், அதிமுக தலைவருமான ஜெயக்குமார் அவர்களிடம் பேசியபோது, போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

அதிமுக-பாஜக கூட்டணி குறித்துப் பேசிய அவர், “பாஜகவோடு கூட்டணி சேர 1000 வீதம் வாய்ப்பு இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எங்களுக்கு திமுக மற்றும் பாஜக ஆகிய இரு கட்சிகளும் அரசியல் எதிரிதான்.

எனவே இந்த இரண்டு கட்சிகள் தவிர வேறு யார் வந்தாலும் சேர்த்துக் கொள்வோம். எங்கள் தலைமையில் தேர்தலை எதிர்கொள்வதற்காகப் பல கட்சிகள் தயாராக உள்ளனர். விரைவில் அறிவிப்பு வெளியாகும்,” என்று கூறியுள்ளார்.

ஏற்கெனவே கூட்டணியில் இருந்த கட்சிகள் குறித்துப் பேசிய அவர், “தமிழ் மாநில காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் எங்கள் தலைமையில் அமையும் கூட்டணியில்தான் வருவார்கள். அவர்களுக்கு மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை,” என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல் சசிகலா, ஓ.பன்னீர்செல்வம் மற்றும் டிடிவி தினகரன் போன்றவர்களுடன் எந்தக் காலத்திலும் சேரப் போவதில்லை. அவர்கள் இல்லாத அதிமுகவே தொடரும் என்றும் தெரிவித்துள்ளார் ஜெயக்குமார்.

இந்நிலையில் பாஜக மற்றும் அதிமுக இடையே இணைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் தமிழ் மாநில காங்கிரசின் தலைவர் ஜிகே வாசன் ஈடுபட்டுள்ளார் என்றும் சில தகவல்கள் பரவி வருகின்றன. இதற்குக் காரணமாக சமீபத்தில் ஜிகே வாசன் ஜேபி.நட்டா மற்றும் எடப்பாடி பழனிச்சாமி அவர்களைச் சந்தித்தது கூறப்படுகிறது.

**வழக்கமான சந்திப்புதான்**

இதற்குப் பதிலளித்த ஜிகே வாசன், “ராஜ்ய சபா உறுப்பினராக கூட்டத்திற்குச் சென்றபோது ஜேபி. நட்டாவை சந்தித்தேன். ஒரு ஐந்து நிமிடம் சிரித்துப் பேசினோம்.

மூன்று நாளுக்கு முன்புகூட தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையுடன் அவரது பயணம் குறித்து ஃபோனில் பேசினேன். எடப்பாடி பழனிச்சாமி அவர்களைப் பார்த்தேன். ஒரு கட்சித் தலைவராக இது வழக்கமான சந்திப்புதான்,” என்று தெரிவித்துள்ளார்.

மேலும் கூட்டணி குறித்துக் கேட்டபோது, “வருகின்ற 12ஆம் தேதி மாநில செயற்குழு கூட்டம் சென்னையில் கூடுகிறது. அங்கு எடுக்கப்படும் முடிவைப் பொறுத்தே யாருடன் கூட்டணி என்பது அறிவிக்கப்படும்,” என்று கூறியுள்ளார் அவர்.

**பாஜக என்ன செய்யப் போகிறது?**

அதிமுக-பாஜக கூட்டணி முறிவுக்குப் பிறகு பாஜக தலைவர்கள் பெரிதும் கூட்டணி குறித்துப் பேசாமல் மௌனம் காத்து வருகின்றனர். இந்நிலையில் தேர்தல் தயாரிப்புகள் குறித்து அக்கட்சியின் மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப்பதியிடம் பேசினோம்.

அவர், ‘25 தொகுதிகளில் வெற்றி பெறுவதே எங்களுடைய இலக்கு. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அதற்காக கட்சியை வலுப்படுத்தும் பணிகளைச் செய்துள்ளோம்,” என்று தெரிவித்துள்ளார்.

அதிமுக கூட்டணி குறித்துக் கேட்டபோது, “கூட்டணி குறித்து தலைமை முடிவெடுக்கும். எங்களுக்கு 39 தொகுதிகளிலும் கட்சியை வலுப்படுத்த வேண்டும் என்பதே இலக்கு. அதை சிறப்பாகச் செய்துள்ளோம். நாங்கள் உறுதியாக வெற்றி பெறுவோம்,” எனக் கூறியுள்ளார் நாராயணன் திருப்பதி.

இந்தியா கூட்டணி குறித்த கேள்வியை முன்வைத்தபோது, “நாடு முழுவதும் இந்தியா கூட்டணி உடைந்து போய்விட்டது. தமிழகத்தில் மட்டுமே திமுக வேறு வழியில்லாமல் காங்கிரசை பிடித்துக் கொண்டிருப்பது ஏன் என்றுதான் புரியவில்லை. காங்கிரஸ் தேவையில்லாத சுமை என்பதை எப்போது திமுக புரிந்துகொள்ளும் என்று தெரியவில்லை,” என்று கூறியுள்ளார் அவர்.

**இந்தியா கூட்டணி**

நாடு முழுவதும் பாஜகவை எதிர்த்து இந்தியா கூட்டணி என்ற பெயரில் மாநில கட்சிகள் சேர்ந்து காங்கிரசின் தலைமையில் ஒன்றிணைந்துள்ளன.

இந்நிலையில் அந்தக் கூட்டணியில் இருந்த நிதிஸ் குமார் சமீபத்தில் பாஜவுடன் இணைந்து பிகாரில் மீண்டும் ஆட்சி அமைத்துவிட்டார். மமதா பானர்ஜி போன்ற சிலர் மாநிலத்தில் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் பாஜகவின் விமர்சனம் குறித்துப் பேசிய செல்வப்பெருந்தகை, “பாஜகவை கூடுதல் சுமை என்று சொல்லி அதிமுகவே விரட்டிவிட்டது. அங்கு அவர்களை பதில் சொல்லச் சொல்லுங்கள். திமுக-காங்கிரஸ் கூட்டணி கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து வெற்றி கூட்டணியாக இருக்கிறது.

அதேநேரம் , சந்திரபாபு நாயுடு, அகாலிதளம், எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்டோர் பாஜகவை விட்டு விலகிவிட்டனர். ஆனால் நாங்கள் உறுதியான கூட்டணியாகத் தொடர்கிறோம்,” என்று தெரிவித்துள்ளார்.

**தமிழக வெற்றி கழகம்**

பிரதான கட்சிகளைத் தாண்டி இந்தத் தேர்தலில் நடிகர் விஜயின் புதிய கட்சியான தமிழக வெற்றி கழகத்தின் பங்கு எப்படி இருக்கும் என்ற விவாதம் அரசியல் களத்தில் அனலாய் கொதித்துக் கொண்டிருக்கிறது.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பங்கேற்கவில்லை என்று விஜய் அறிவித்துவிட்டாலும், அவரது கட்சித் தொண்டர்களின் வாக்கு யாருக்குப் போகும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதுகுறித்துப் பேசிய அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் ராம்குமார், “நாங்கள் இந்தத் தேர்தலில் பங்கேற்கவில்லை என்று கூறிவிட்டாலும், ஒரு கட்சியாக எங்களது தொண்டர்களுக்கு வழிகாட்ட வேண்டிய சூழல் உள்ளது. எனவே, விரைவில் இந்தத் தேர்தலில் யாருக்கு ஆதரவு அல்லது என்ன செய்ய வேண்டும் என்று கட்சி அறிவிப்பு வெளியிடும்,” என்று தெரிவித்துள்ளார்.





